# கிறிஸ்து இஸ்லாத்திலும் கிறிஸ்தவத்திலும்

ஜான்கில்கிரைஸ்ட்



**Christhu Islamilum Christavathilum**
**(TAMIL)**

**CHRIST IN ISLAM AND CHRISTANITY**

**By**
**JOHN GILCHRIST**

**All rights Strictly reserved. No Part of this publication may be transtated or transmitted on any form or by any means electronic or mechanical, including photocopy. recording or any information storage and retrieval system without permission in writing from the publisher.**

# கிறிஸ்து இஸ்லாத்திலும் கிறிஸ்தவத்திலும்

**கிறிஸ்து (அவருக்கு சமாதானம்) வைக் குறித்து இஸ்லாம் என்னும் நூலுக்கு பிரதியுத்தரம்**

**ஜான் கில்கிரைஸ்ட்**

இயேசு கிறிஸ்துவைக் குறித்த கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் மனப்பாங்கு குறித்த ஓர் ஆழமான ஆராய்ச்சி நூல்

**பொருளடக்கம் :**


1. மரியாள்-குர்ஆனிலும் வேதாகமத்திலும்
2. இயேசுவுக்கும் கொடுக்கப்பட்ட பிரத்யேக பெயர்
3. இயேசுவின் பிறப்பு
4. மெல்கிசேதேக்-வரப்போகிற கிறிஸ்துவுக்கு மாதிரி
5. இயேசு-ஜீவனுள்ள தேவனின் நித்தியமான குமாரன் ஒருபோதும் இல்லாத கடவுள்




கிறிஸ்து-இஸ்லாத்திலும் கிறிஸ்தவத்திலும் கிறிஸ்துவைக் குறித்து இஸ்லாம் என்னும் தலைப்பில் அஹ்மத் தீதாத் 1983-ல் ஒரு புத்தகத்தை வெளியிட்டார். இயேசுவைக் குறித்து இஸ்லாத்தின் அடிப்படைக் கருத்து குறித்த ஒரு பொதுவான அளவீடாக இருக்கும்படியாகவே இத்தலைப்பு கொடுக்கப்பட்டிருந்தாலும், புத்தகத்தின் பெரும்பகுதி கிறிஸ்தவத்துக்கு எதிரான தர்க்கப் புத்தகமாகவே இருக்கிறது. தீதாத் அவர்களின் பல புத்தகங்களைப் போலவே இந்த புதிய நூலும் கிறிஸ்தவ விசுவாசத்துக்கு எதிரான தர்க்கமாகவே அமையும்படி எழுதப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் அவர் அந்நூலில் எழுப்பியுள்ள விவாதங்களை ஆராய்ந்து, அவற்றிற்கு எதிரான திடமான மறுப்புகளை முன்வைப்பது சரியென்று நம்புகிறோம். பொதுவான முறையில் அந்நூலை எடுத்துக் கொள்ளாமல் இயேசு கிறிஸ்துவைக் குறித்த கிறிஸ்தவ விசுவாசம் சம்பந்தமான விவாதங்களை எதிர்கொள்ளும் வகையிலேயே இந்நூல் அமைய விழைகிறோம்.

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் குணாநலங்கள் குறித்து வேதம் சொல்லுபவைகளை நம்பகமற்றவை என நிரூபிக்க தீதத் மேற்கொண்ட முயற்சியில் அவர் பரிதாபமாகத் தோல்வியடைந்துள்ளார் என்பதை ஆரம் பத்திலேயே சொல்ல நாங்கள் தயங்கமாட்டோம். இதற்கு ஒரு நல்ல உதாரணம் நூலின் ஆரம்பத்திலேயே 6ம் பக்கத்தில் இயேசுவின் பெயரை

‘ஈசா’ (குர்ஆனில் இயேசு வுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயர்) என்று குறிப்பிட்டுள்ள தாகும். இப்பெயர் ‘ஏசா’ என்ற எபிரேய பெயரிலிருந்து எடுக்கப்பட்டதாகும் என்றும் அவர் கூறுகிறார். இந்த ஏசா என்பது பொதுவானதொரு யூதப் பெயர் என்றும் வேதாகமத்தின் முதல் புத்தகமான ஆதியாகமத்தில் அறுபது முறைக்கும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் கூறுகிறார் (கிறிஸ்து-இஸ்லாத்தில்-பக்கம் 6) வேதா கமத்தையும், யூத வரலாற்றையும் குறித்த தீதத் அவர்களின் அறியாமையானது அவருடைய புத்தகத்தின் ஆரம்பப் பகுதியிலேயே காணப்படுகிறது, ஏனெனில் ஆதியாகம புஸ்தகத்தில் ஒரேயொரு ஏசா மட்டுமே குறிப்பி டப்பட்டுள்ளார். அவர் இஸ்ரவேலரின் மெய்யான தகப் பனாகிய யாக்கோபின் சகோதரனாவார். அந்த அறுபதுக் கும் மேற்பட்ட இடங்களில் குறிப்பிடப்பட்டவர் இந்த ஏசா மட்டுமே, இஸ்ரவேலரின் சந்ததியில் ஏசா என்ற வேறொரு வர் இருந்ததாக வேதாகமத்தில் வேறு எங்கும் குறிப்பிடப் படவில்லை. யூதர்கள் தங்கள் குழந்தைகள் எவரையும் இந்தப் பெயரால் அழைக்கவேயில்லை.

யாக்கோபும் ஏசாவும் தங்கள் வாழ்க்கையின் பெரும்பகுதியில் எதிரிகளாயிருந்தனர், அவர்கள் சந்ததியி னரான இஸ்ரவேலரும் ஏதோமியரும் கூட பலமுறை ஒருவருக்கொருவர் எதிராக போர் செய்துள்ளனர் இஸ்ர வேலரின் தகப்பனாகிய யாக்கோபின் சகோதரன் ஏசா எப் போதுமே யாக்கோபுக்கு எதிராய் இருந்து, தேவனால் புறக் கணிக்கப்பட்டதால் (எபிரேயர் 12:17) யூதப் பிள்ளைகள்



எவருக்கும் ஏசா என்னும் பெயர் சூட்டப்படவில்லை. ஆகவே இயேசுவின் உண்மையான பெயர் ஏசா என்று சொல்வது ஒரு தவறான கூற்றாகும்.

ஒரு வெளிப்படையான வரலாற்றுத் தவறு இப்படி தீதாத் அவர்களின் புத்தகத்தின் ஆரம்பத்திலேயே காணப் படுகிறது எனினும் இந்தத் தவறுக்கு அவர் முழுமையான காரணமல்ல. கிறிஸ்தவ அரேபியர்கள் எப்பொழுதுமே இயேசுவை ‘யாசு’ என்று தான் அழைத்தனர். இது ‘யாஷுவா’ என்னும் அரமேயிக் பதத்திலிருந்து வந்தது. கிரேக்க மொழியில் இது ‘யோசேர்ஸ்’ என்றும் ஆங்கிலத் தில் ‘ஜீசஸ்’ என்றும் வழங்கப்படுகிறது. முஹம்மது தான் ஒருபோதும் வெளிப்படுத்தாத காரணங்களுக்காக இயேசுவை ‘இசா’ என்று அழைத்தார். அரேபியாவிலிருந்த யூதர்கள் இயேசுவின் உண்மையான பெயரைத் தந்திர மாக தங்கள் முற்பிதாவின் தேவபக்தியற்ற சகோதரனின் பெயராக மாற்றி முஹம்மதுவை வஞ்சகமாக வழி தப்பச் செய்தனர் என்று சிலர் அபிப்பிராயம் கூறியுள்ளதற்கு ஆதரவாக தீதத் இப்பெயரை ‘ஏசா’ என்று வியாக்கியானம் செய்திருப்பது இருக்கிறது. தீதத்தின் விளக்கம் சரியென் றால் குர்ஆன் இறைவனால் இறக்கப்பட்டது என்ற நிலைப் பாட்டுக்கு கடும் எதிர்ப்பாக அது அமைகிறது.

முஹம்மது பயன்படுத்திய ‘ஈஸா’ என்ற பெயரை விடவும் ‘ஏசா’ என்னும் பெயர் இயேசுவின் மெய்யான. அசலான பெயருக்கு எவ்விதத்திலும் அருகில் வரமுடியாது. இந்த அடிப்படைத் தவறானது,

கிறிஸ்துவைக் குறித்து கிறிஸ்தவமும் இஸ்லாமும் கூறுவனவற்றுக்கு இடையி லுள்ள வேறுபாடுகளை தீதாத் எவ்விதம் எடுத்துக் காட்டப் போகிறார் என்பதை நிர்ணயித்தது ஆகவே குர்ஆன் சொல்கிற 'ஈசா' அல்ல வேதம் குறிப்பிடும் இயேசுவே உண்மையான இயேசு என்ற முடிவான தீர்ப்பை எதிர்ப்பது கடினம். குர்ஆன் ஈசாவை கிறிஸ்தவத்தின் மெய்யான இயேசுவுடன் தொடர்புபடுத்திக் கூறும் மற்ற விஷயங்களை தீதாத்தின் நூலில் இப்போது நாம் காண்போம்.

**1. மரியாள் குர்ஆனிலும் வேதாகமத்திலும்**

இயேசுவைக் குறித்த குர்ஆனின் போதனைகள் குறித்து தீதாத் அதிகம் கூறுவது போல, அவருடைய தாயா ராகிய மரியாளைக் குறித்த போதனைகளைக் குறித்தும் அதிகம் கூறுகிறார்.

**இயேசுவின் தாய்வழிப் பாட்டியான அன்னாள் இதுவரை மலடியாயிருந்தார். தேவனுக்கு முன்பாக தன்னுடைய இருதயத்தை ஊற்றி, தேவன் தனக்கு ஒரு குழந்தையைக் கொடுத்தால் அதை தேவனுடைய ஆலயத்தில் அவருடைய சேவைக்கென பிரதிஷ்டை செய்வதாகக் கூறியிருந்தார். (தீதாத், இஸ்லாத்தில் கிறிஸ்து, பக்கம் 9)**

ஞாயிறு பள்ளியில் பயிலும் ஒவ்வொரு கிறிஸ்தவ குழந்தைக்கும் அன்னாளின் கதை நன்கு தெரியும். தனக்கு ஒரு ஆண்பிள்ளை வேண்டுமென்று ஊக்கமாக அன்னாள் ஜெபித்ததும், தன் ஜெபத்திற்குப் பதிலளித்து



ஒரு ஆண்பிள்ளையை தேவன் தந்தால் அவனை வாழ்நாள் முழுவதும் கர்த்தருடைய சேவைக்கு அர்ப்பணிப்பதாக வாக்களித்ததும் தெரியும். ஒரே பிரச்சினை என்னவென்றால் அன்னாளுக்குப் பிறந்தது சாமுவேல் என்னும் குழந்தை, அது பிற்காலத்தில் ஒரு தீர்க்கதரிசியாகி தாவீதை இஸ்ரவேலின் மேல் இராஜாவாக, மரியாள் மற்றும் இயேசுவின் காலத்துக்குச் சுமார் ஆயிரம் ஆண்டுகள் முன்பு அபிஷேகம் பண்ணினார் என்பதாகும். அன்னாளின் ஜெபம் சாமுவேல் 1:11 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. பிற்பாடு அதே அதிகாரத்தில் மேலும் நாம் வாசிக்கிறோம்.

**குறித்த காலத்திலே அன்னாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குச் சாமுவேல் என்று பேரிட்டார். நான் அவனைக் கர்த்தரிடத்தில் கேட்டுப் பெற்றேன். என்று சொல்லி அவ்வாறு பேரிட்டார். (1 சாமுவேல் 1:20)**

இப்படியிருக்க வேதாகமம் முஸ்லிம் அறிஞர் என்று தம்மை அழைத்துக் கொள்ளுகிறபடி இருக்க வேண்டிய தீதாத் அவர்கள் சாமுவேலின் தாயாரை மரியாளின் தாயாரோடு குழப்பும் தவறு செய்ததென்ன? இதன் காரணம் குர்ஆன் தானே இவ்விரண்டு பெண் களையும் சேர்த்துக் குழப்பியிருக்கிறது. அன்னாளின் பெயரை அது குறிப்பிடாவிட்டாலும் இரண்டு பெண்களை யும் சேர்த்துக் குழப்பும் தவறான வம்ச அட்டவணையைப் பதிவுசெய்திருக்கிறது. (ஸூரா 3:35-36) (இஸ்லாமிய பாரம்

பரிய நூல்களான ஹதீத்களில் சில உண்மையிலேயே மரியாளின் தாயாரின் பெயர் அன்னாள் என்று வெளிப் படையாக கூறுகின்றன. மேலும் குர்ஆனின் பழங்கால மற்றும் நவீனகால வியாக்கியானிகள் மரியாளின் தாயினுடைய உண்மையான பெயர் இதுதான் என்று ஏற்றுக்கொள்கின்றனர்.

தீதத் தமது நூலின் அடுத்த பக்கத்தில் கூறுகிறார். இதுதான் கதை. ஆனால் முஹம்மது(புஹ்) எங்கிருந்து இந்த அறிவைப் பெற்றார்? அவர் ஒரு 'உம்மி' (படிப்பறி யாதவர்), அவருக்குப் படிக்கவோ அல்லது எழுதவோ தெரியாது. (இஸ்லாத்தில் கிறிஸ்து பக்கம் 10). வெளிப்படை யான ஒரு தவறு செய்யப்பட்டதால் இக்கேள்வி நல்லது தான்! குர்ஆன் இறைவனுடைய வார்த்தை என்னும் கூற்றுக்கு ஆதரவாக முஹம்மது படிப்பறியாதவர் என்ற உண்மையைக் குறிப்பிட்டாலும் இந்த இரண்டு பெண்கள் விஷயத்தில் குழப்பியிருப்பது தெளிவாகத் தெரிவதால், மெய்யாகவே முஹம்மது கல்வியறிவற்றவர் என்ற உண்மையானது அவர்தான் குர்ஆனை உண்மையில் இயற்றியவர் என்பதற்கு பெரும் ஆதாரமாயிருக்கிறது. யூதருடைய வேதவாக்கியங்களை அவர் நன்கு கற்றறிந்தி ருப்பாரானால் இப்படிப்பட்ட தவறுகளை ஒருபோதும் செய்திருக்க மாட்டார்.

உண்மையில் மரியாளின் பிறப்பு மற்றும் ஒப்படை த்தல் குறித்த குர்ஆனின் முழு கதையும் வேதாகமத்தின் பல்வேறு வசனப் பகுதிகளைக் குழப்பிக்கொண்டதால்



உருவானதாகும். மரியாள் துவக்கத்திலேயே எலியாவுடன் சேர்த்துக் குழப்பப்பட்டுள்ளார். எலியா தனியே வாழ்ந்து சிறிது காலம் காகங்கள் மூலம் வானத்திலிருந்து அப்பமும் இறைச்சியும் கொடுக்கப்பட்டு போஷிக்கப்பட்ட வருமான ஒரு தீர்க்கதரிசி (1 இராஜாக்கள் 17:6- மரியாளும் கூட வானத்திலிருந்து போஷிக்கப்பட்டார் என்று குர்ஆன் ஸூரா 3:37ல் கூறுகிறது? இருப்பினும் மரியாளுடைய தாயாருக்குக் கொடுக்கப்பட்ட அன்னாள் என்னும் பெயர் தான் இந்தக் கதையை எழுதியவர்கள் தங்கள் அடிப்படைக் கதையை எங்கிருந்து பெற்றனர் என்பதை உண்மையில் நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. இதன் மூலக்கதை சிறிய யாக்கோபின் புரோட் இவாஞ்சலியம் என்னும் தள்ளுபடியாகம புத்தகத்தில் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது என்பதை நாம் குறிப்பிடவேண்டும். இப்புத்தகத்தின் புராண அடிப் படையை அறியாமலேயே முஹம்மது அதைக் குரானில் சேர்த்துக் கொண்டார்.

அன்னாள் ஒரு மகனுக்காகச் செய்யும் ஜெபம் குறித்த பதிவையும் லூக்காவில் வரும் பின்வரும் வசன பகுதியையும் குழப்பிக் கொண்டதால் இக்கதை எழும்புகிறது.

ஆசேர் கோத்திரத்தாளும் பானுவேலின் குமாரத்தி யுமான அன்னாள் தீர்க்கதரிசியானவள் இருந்தாள். அவள் மிகவும் வயது சென்றவளும், கன்னிப்பிராயத்தில் வாழ்க்கைப்பட்டது முதல் ஏழு வருஷம் தன் புருஷனோடு வாழ்ந்தவளுமாயிருந்தாள். ஏறக்குறைய எண்பத்துநாலு

வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல் இரவும் பகலும் உபவாசித்து ஜெபம் பண்ணி தேவனைத் தொழுதுகொண்டு வந்தாள். அவளும் அந்தச் சமயத்திலே வந்திருந்து தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, எருசலே மின் மீட்புவரக் காத்திருந்த யாவருடனும் அவரைக் குறித்துப் பேசினாள். (லூக்கா 2:36-38)

காலக்கிரமத் தவறு எப்படி நிகழ்ந்தது என்பதை எவரும் தெளிவாகக் காணலாம். அன்னாள் என்னும் எபிரெய அசல் பெயருள்ள இன்னொரு பெண்ணை இங்கே நாம் காண்கிறோம். என்றாலும் இந்தப் பெண் இரவும் பகலும் தேவாலயத்தில் இருந்து பல ஆண்டு களாக குறிப்பிடத்தக்க வகையில் உபவாசித்து தேவனைத் தொழு துகொண்டு வந்தாள். மரியாள் எலியாவுடனும் சாமு வேலுடனும் வைத்துக் குழப்பப்பட்டுள்ளது மட்டுமல்ல தீர்க் கதரிசியானவளான அன்னாளுடனும் வைத்துக் குழப்பப் பட்டுள்ளார். சாமுவேலின் தாயார் மற்றும் பானுவேலின் குமாரத்தி ஆகிய இந்த இரண்டு அன்னாள்களும் ஒருவ ரோடொருவர் வைத்துக் குழப்பப் பட்டுள்ளனர் என்பது தெளிவு. ஆகவே குர்ஆனில் ஸுரா 3ல் உள்ள கதையானது வேதாகமத்தில் இந்த இரண்டு பெண்களைக் குறித்ததான முற்றிலும் வேறுபட்ட இரண்டு கதைகளின் நூதனமான கலவைதான் என்பது தெளிவாகிறது.

மரியாளின் தாயாரை அவருக்கு பத்து நூற்றாண் டுகள் முன்பு வாழ்ந்த ஒரு பெண்ணோடு குழப்பியதான ஒரு பெரும் தவறை தீதாத் அவர்கள் செய்தது தெளிவாகத்



தெரிகிறது. ஆனால் இது போதாது என்பதுபோல அவர் தமது புத்தகத்தில் மரியாளையே அவருக்கு இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு பெண்ணோடு சேர்த்துக் குழப்பிடுகிறார். தமது இஸ்லாத்தில் கிறிஸ்து என்னும் புத்தகத்தில் 15ம் பக்கத்தில் மரியாளை பக்கத்து வீட்டார் அழைக்கும் இந்த வசனத்தைச் சுட்டிக்காட்டுகிறார்.

யா உக்தா ஹரூனா- 'ஓ ஆரோனின் சகோதரியே' (ஸுரா 19:28). 'ஆரோனின் சகோதரி' என்ற இந்தப் பெயர் குறித்து அதற்கு அடுத்த பக்கத்தில் யூசுப் அலியின் விளக் கத்தைக் குறிப்பிடுகிறார். மரியாளுக்குத் தனது உயர்ந்த வம்சாவளியையும் தனது தாய் மற்றும் தகப்பனுடைய அசாதாரணமற்ற ஒழுக்கநெறிகளையும் நினைப்பூட்டப் பட்டது என்று மொழிபெயர்ப்பாளர் அங்கு கூறுகிறார். இங்கே உள்ள பிரச்சினை என்னவென்றால் குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள 'ஆருன்' (ஆங்கிலத்தில் ஆரோன்) ஒரு லேவிகோத்திர ஆசாரியனும் மோசேயின் சகோதரனுமா வார். அவர் இயேசுவுக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் என்பதே. மோசே ஆரூனா அக்கி என் சகோதரனாகிய'' ஆரோன் என்று வெளிப்படையாகப் பேசினதாக குர்ஆனில் ஸுரா 20:30ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படியிருக்க இயேசுவின் தாயாகிய மரியாள் ஆரோன் மற்றும் மோசேயின் சகோதரியாக எப்படி இருக்க முடியும்?

அன்னாள் மற்றும் சாமுவேல் விஷயம் போல இவ்விஷயத்தில் முஹம்மதுவின் தவறு தள்ளுபடியாகம

புத்தகத்தால் ஏற்பட்டது என்று கூறமுடியாது. இம் முறை குழப்பத்திற்கு முழுகாரணம் முஹம்மதுவே. தம் வாழ் நாளில் கிறிஸ்தவர்கள் இந்த கால அட்டவணைத் தவறு குறித்து எதிர்வினா எழுப்பியபோதெல்லாம் முஹம்மது அவர்களிடம் பூர்வகால மக்கள் அப்போஸ்தலர்கள் மற்றும் பக்தியுள்ளவர்களான தங்களுக்கு முன்சென்ற நபர்களின் பெயர்களை தம் சகநாட்டு மக்களுக்கு வைப்பது வழக்கம் என்று பதில் கூறுவார். (ஸாஹிஹ் முஸ்லிம், வால்யூம் 3, பக்கம் 1169). சிந்திக்கத்தக்க இந்த வரிகளை அங்கீகரிப்பது கடினம், ஏனெனில் வேறு எவரும் இப்படி அழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தை குர்ஆனில் காண இயலாது. மரியாள் மறைமுக அர்த்தத்தில் மட்டுமே ஆரோனுடைய சகோதரி (உக்டா) என்று அழைக்கப்பட்டிரு ந்தால் குர்ஆனில் ஆரோன் மோசேயின் சகோதரன் (அக்ஹா) என்று நேரடி அர்த்தத்தில் அழைக்கப்படுவது கூட மிக அரியகாரியம் என்பது உண்மை, ஆனால் அவர் அப்படித்தான் பலமுறை அழைக்கப்பட்டிருகிறார். குர்ஆனில் வேறு இடங்களில் (ஸுரா 4:12, 4:23 மற்றும் 4:176ல் உள்ளது போல) எப்போதும் உக்டன் என்ற வார்த்தை நெருங்கிய சகோதரியைக் குறிக்கவே பயன்படு த்தப்பட்டுள்ளது, மரியாளின் விஷயத்தில் இந்த வார்த்தை யைப் பயன்படுத்தியிருப்பது 'ஆரோனின் இரத்த சம்பந்த மான சகோதரி' என்றுதான் பொருள்படும். முஹம்மது யோசனை தெரிவிப்பதுபோல தன்னுடைய மூதாதையான ஆரோனின் பெயர் வைக்கப்பட்டது என்று அர்த்தமாகும் என்று சொல்லி விளக்கம் தந்து விட்டுவிடமுடியாது.



இந்த அர்த்தம் கொண்டது என்று எண்ணப்பட வேண்டுமென்று சொன்னாலும் கூட, அது ஏற்றுப் கொள்ளப்பட முடியாத யூகங்களுக்கு வழிகோலுமாதலால் கடினமான நிலைமைகளை நாம் சந்திக்க நேரிடும். அந்த நாட்களில் மக்கள் தங்களைப் பெற்றவர்களுடைய பெயர் களைச் சூட்டப்பட்ட குமாரர் குமாரத்திகளாகவே இருந்தனர் (ஒருபோதும் தற்செயலாகவும் கூட தங்கள் சகோதரர், சகோதரிகளின் பெயர்கள் சூட்டப்பட்டிருக்கவில்லை. (உதாரணமாக மத்தேயு 1:1ல் இயேசு 'ஆபிரகாமின் குமாரனுமாகிய தாவீதின் குமாரன்' என்று அழைக்கப் பட்டுள்ளார், லூக்கா 1:5ல் எலிசபெத் 'ஆரோனின் குமாரத்தி களில்' ஒருத்தி என்று அழைக்கப்பட்டுள்ளார்). இங்கே பிரச்சினை என்னவென்றால் மரியாள் ஆரோனின் வழியில் பிறந்தவரே அல்ல. ஆரோன் தன் சகோதரனாகிய மோசேயுடன் லேவிக்குப் பிறந்த ஒரு லேவிய ஆசாரியன் ஆவார். அந்த லேவி யாக்கோபின் குமாரர்களில் ஒருவர். மறுபுறம் மரியாள் யூதா கோத்திரத்தில் பிறந்தவர்.

இந்த யூதா யாக்கோபின் இன்னொரு குமாரர். மரியாள் தாவீதின் வம்சத்தவர் (லூக்கா. 1:32). ஆரோன் பிறந்த கோத்திரத்துக்கு உட்பட்டவரல்ல அவர். இவர்கள் இருவருக்கும் இருக்கக்கூடிய ஒரே உறவு, அதுவும் தூரமான ஒன்று, அவர்கள் ஒரே ஜாதியை, இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுதான். லூக்கா 1:36ல் எலிசபெத் மரியாளின் 'இனத்தாள்' என்று அழைககப்பட்டுள்ளது. மெய்தான், ஆனால் அவர்களுடைய முன்னோர்கள்

இடையில் ஏதாவது திருமண உறவு ஏற்பட்டிருக்குமானால் அது எலிசபெத்தின் வழியில்தான் இருக்க வேண்டும். எலிசபெத்தின் முன்னோர்களில் ஒருவர் யூதா கோத்திரத் தில் திருமணம் செய்திருக்க வேண்டும்( இதில் ஆச்சரியம் உண்டாவது கடினம், ஏனெனில் அசீரியாவிலும் பாபிலோ னிலும் சிறைப்பட்டிருந்து பின்பு, வாக்குப்பண்ணப்பட்ட பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பிய மீதியான இஸ்ரவேலருள் யூதாகோத்திரத்தார் மிகப் பெரும்பான்மை யாய் இருந்தனர்) மறுபுறம் வேதாகமம் வெளிப்படையாக இயேசுவானவர் மெல்கிசேதேக்கின் வழிவந்த நித்தியப் பிரதான ஆசாரியர் என்று குறிப்பிடுகிறது. இதனால் அவர் எவ்விதத்திலும் லேவி கோத்திரத்தில் ஆரோன் வழியாய் அவர் வந்திருக்கமுடியாது. அதேபோல அவருடைய தாயா ரான மரியாளும் தம்மில் லேவிகோத்திர இரத்த சம்பந்தம் எதுவும் கொண்டிருக்க முடியாது. ஆகவே எவ்விதத்திலும் ஆரோனின் வம்சத்தில் அவர் பிறந்திருக்கவோ அவருக்கு உறவினராக இருக்கவோ முடியாது.

‘அல்லாமலும் இஸ்ரவேல் ஜனங்கள் லேவிகோ த்திர ஆசாரிய முறைமைக்குட்பட்டிருந்தல்லவோ நியாயப் பிரமாணத்தைப் பெற்றார்கள். அந்த ஆசாரிய முறைமை யினாலே பூரணப்படுதல் உண்டாயிருக்குமானால், ஆரோனுடைய முறைமையின் படி அழைக்கப்படாமல், மெல்கிசேதேக்கினுடைய முறைமையின்படி அழைக்கப் பட்ட வேறொரு ஆசாரியர் எழும்பவேண்டுவதென்ன?



ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமானால், நியாயப்பிர மாணமும் மாற்றப்படவேண்டியதாகும். இவைகள் எவரைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறதோ, அவர் வேறொருகோத்திரத்துக்குள்ளனவராயிருக்கிறாரே: அந்தக் கோத்திர த்தில் ஒருவனாகிலும் பலிபீடத்து ஊழியம் செய்த தில்லையே. நம்முடைய கர்த்தர் யூதா கோத்திரத்தில் தோன்றினாரென்பது பிரசித்தமாயிருக்கிறது. அந்தக் கோத்திரத்தைக் குறித்து மோசே ஆசாரியத்துவம் சம்பந் தமாக ஒன்றுஞ் சொல்லவில்லையே. அல்லாமலும் மெல்கிசேதேக்குக்கு ஒப்பாய் வேறொரு ஆசாரியர் எழும்புகிறார் என்று சொல்லியிருப்பதால் மேற்கண்டுள்ள விஷயம் மிகவும் பிரசித்தமாய் விளங்குகிறது. அவர் மாம்ச சம்பந்தமான கட்டளையாகிய நியாயப் பிரமா ணத்தின்படி ஆசாரியராகாமல்... அழியாத ஜீவனுக்குரிய வல்லமை யின்படியே ஆசாரியரானார்’ (எபிரெயர் 7:11-17)

ஆனபடியால் மரியாளுக்கு ஆரோனுடன் எவ்வித தொடர்பும் இல்லையென்பதும், குர்ஆனில் அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள உறவுப் பெயர் மெய்யாகவே பொருத்த மற்றது என்பதும் வெளிப்படையாகத் தெரிகிறது. அப்படி யானால் இத்தவறு எவ்வாறு ஏற்பட்டது? நாம் வேதாகமத் துக்குத் திரும்பவேண்டும் அதில் நாம் வாசிக்கிறோம்.

‘தீர்க்கதரிசியானவளும் ஆரோனுடைய சகோதரியு மாகிய மிரியாமும் கூட தன் கையில் தம்புருவை எடுத்துக் கொண்டு’ (யாத்திராகமம் 15:20)

இங்கே சொல்லப்பட்டிருக்கும் பெண் ஆரோனுடைய உண்மையான சகோதரியாவார். இயேசுவின் தாயாகிய மரியாளுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். இந்த இரண்டு பெண்களுடைய பெயர்களும் மிரியாம் என்று எபிரெய மொழியிலும் மர்யம் என்று அரபு மொழியிலும் ஒரேவிதமாக அழைக்கப்படுவதாலேயே இக்குழப்பம் ஏற்பட்டது.

குர்ஆனில் உக்டா ஆரூன் என்பது ஆரோனின் இரத்தசம்பந்தமான சகோதரி என்று பொருள்படும் என்று கண்டோம். இதற்குச் சரியாகப் பொருந்துபவர் மிரியாம். இயேசுவின் தாயாகிய மர்யமை இந்தப் பெண்ணோடு குழப்பிக் கொண்டார் முஹம்மது என்பது தெளிவு. குர்ஆனில் மரியாளின் தகப்பனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயர் மூலமாக இந்தச் சான்று பலமாக உறுதிப்படுத்தப் படுகிறது. வேதாகமத்தில் நாம் 'யோகெபேத்.... அம்ராமு க்கு ஆரோனையும், மோசேயையும் அவர்கள் சகோதரியான மிரியாமையும் பெற்றாள்' (எண்ணாகமம் 26:59) என்று வாசிக்கிறோம். ஆகவே ஆரோன், மிரியாம் என்பவர்களுடைய தகப்பன் அம்ராம் என்னும் பெயரை யுடைய ஒருவர் என்றும் இந்த பெயர்தான் இயேசுவின் தாயாராகிய மரியாளின் தகப்பனுக்கும் குர்ஆனில் கொடுக் கப்பட்டுள்ளது! குர்ஆனில் இம்ரான் என்று அவர் அரபு மொழியில் அம்ரான் அழைக்கப்படுகிறான். (ஆபிரகாம் அரபு மொழியில் இப்ராஹிம் என்று அழைக்கப்படுவதுபோல) மரியாள்



மர்யம் அப்னடா இம்ரான் (இம்ரானின் மகள் மரியாள்) என்று தெளிவாக அழைக்கப்படுகிறார். (குர்ஆன்-ஸூரா 66:12). அவர் ஆரோனின் சகோதரி என்று மட்டுமல்ல இம்ரானின் மகள் என்றும் அழைக்கப்படுகிறார். ஆகவே ஆரோனின் உண்மையான சகோதரியும் அம்ரானின் மகளுமான மிரியாமுடன் மரியாள் குழப்பிக் கொள்ளப் பட்டுள்ளார் என்பதற்கு இரட்டிப்பான சான்றுகள் இதனால் கிடைத்துள்ளன.

மரியாள் மிரியாமுடன் குழப்பக் கொள்ளப்படா விட்டால் குர்ஆனில் ஏன் அவர் 'ஆரோனுடைய சகோதரி' என்று அழைக்கப்படவேண்டும் என்ற கேள்வியை எழுப் பலாம்? மரியாள் ஆரோனின் வழியில் பிறந்தவர் அல்ல என்றும் இஸ்ரவேலின் வேறெந்த முற்பிதா அல்லது தலை வரையும்விட அதிகமாக ஆரோனுக்கு அவர் நெருங்கிய உறவுக்காரர் அல்ல என்றும் நாம் காண்பித் திருக்கிறோம். எனவே அவரை அவ்வாறு ஆரோனின் சகோதரி என்று அழைப்பது எவ்வாறு பொருந்தும்? ஆரோனின் சகோதரி என்பதை விட அவர் மோசே, எலியா, சாலொமோன், யோசேப்பு, அல்லது வேறு யாராவது ஒரு தீர்க்கதரிசியின் சகோதரி என்று அவர் ஏன் அழைக்கப்படவில்லை? பெயரிலே எந்த பொருத் தத்தையும் நாம் காண முடியாது என்பது மட்டுமல்ல, அது தவறான யூகத்தினால் ஏற்பட்டது சரியில்லாதது என்பதை மேலே எபிரெயர் நிருபத்திலிருந்து நாம் குறிப்பிட்ட வசன பகுதி தெளிவாக்குகிறது.

ஆகவே இரண்டு அன்னாள்களையும் குர்ஆன் குழப்பி இருப்பது மட்டுமல்ல இரண்டு மரியாள்களையும் கூட குழப்பியிருக்கிறது. வேதாகத்தில் கூறப்பட்டுள்ளதை விட குர்ஆனில் கூறப்பட்டுள்ள மரியாளின் வாழ்க்கை விவரங்கள் மேம்பட்டவை என்று காண்பிக்க தீதாத் மிகுந்த சிரமம் எடுத்துக்கொண்டுள்ளார், ஆனால் நாம் சுட்டிக் காட்டிய காலக்குறிப்புத் தவறுகளை அது கொண்டுள்ளதால் வேதாகமத்தில் தரப்பட்டுள்ள விவரங்களை மெய்யானவை என்று தெளிவாகிறது.

தீதாத் மரியாளைக் குறித்துச் சொன்ன மூன்று மேலதிக விவரங்களையும் நாம் முடிவாக கவனிக்க வேண்டும். ஒரு பக்கத்தில் அவர் ஸூரா 3:42ஐ மேற்கோள் காட்டுகிறார். தேவதூதர்கள் மரியாளைப் பார்த்து, தேவன் உன்னை சகல ஜாதிகளிலுமுள்ள எல்லாப் பெண்களை யும்விடத் தெரிந்து கொண்டார் என்று சொல்வதாக அதிலுள்ளது. அவர் மேலும் கூறுகிறார்.

'அப்படிப்பட்ட ஒரு மரியாதை கிறிஸ்தவர்களின் வேதாகமத்திலும் கூட மரியாளுக்குத் தரப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை' (தீதத், இஸ்லாத்தில் கிறிஸ்து பக்கம் 8)

இந்தக் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. ஏனெனில் எலிசபெத் மரியாளிடம் சொன்னதைக் குறிப்பிடும்போது குர்ஆன் வசனம் கூறுவதுபோலவே வேதமும் கூறுகிறது.

'ஸ்தீரீகளுக்குள் நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்: உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது!' (லூக்கா 1:42)

சகல நாடுகளிலுமுள்ள, எல்லாப் பெண்களைக்



காட்டிலும் மரியாள் தெரிந்து கொள்ளப்பட்டார் என்பதை இந்த வசனத்தில்தான் நாம் காண்கிறோம் என்பதே உண்மை. இப்படிப்பட்ட ஒருவராக அவர் தெரிந்து கொள்ளப்பட்டார் என்ற அறிவிப்பு குர்ஆன் மற்றும் வேதாகமம் இரண்டிலுமே, அவர் பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவை, நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட மேசியாவை, ஒரு குமாரனைப் பெற்றெடுப்பார் என்ற வாக் குறுதி சம்பந்தமானதாயிருக்கிறது. (ஸூரா 3:45, லூக்கா 1:31-33). எலிசபெத் மிகவும் சரியாக 'உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது' என்று கூறினார். மனிதரில் மிகச் சிறந்தவரை, எல்லா ஜாதிகளின் மனிதரிலும் மேலானவராக உலக இரட்சகராகத் தெரிந்துகொள்ளப் பட்டவரை இயேசு கிறிஸ்துவை தாயாக இருந்து பெற்றதி னாலேயே மரியாள் பெண்களில் மிகச் சிறந்தவர், எல்லா ஜாதிகளின் பெண்களுக்கும் மேலானவராகத் தெரிந்து கொள்ளப்பட்டவர் ஆகிறார்.

நாம் கருத்தில் கொள்ளவேண்டிய தகுதியுடைய இரண்டாவது விஷயமாக தீதாத் அவர்களால் கூறப்பட்டுள் ளது யாதெனில் இயேசு கிறிஸ்து (பிபுஹ்)வின் தாயார் மரியாளைக் கனம்பண்ணும் வண்ணமாக குர்ஆனில் ஸூரத் மர்யம் (ஸூரா 19) என்ற முழு அத்தியாயமே உள்ளது என்பதாகும். (இஸ்லாத்தில் கிறிஸ்து, பக்கம் 11) குர்ஆனில் வெளிப்படையாகப் பல சந்தர்ப்பங்களில் குறிப்பிடப்பட்டு ள்ள ஒரே பெண்மணி மரியாள்தான் என்பதையும் அவர் எடுத்துக்காட்டியிருந்தால் இன்னும் நன்றாய் இருந்திருக்கும்.

வேறு எந்தப் பெண்ணும் அப்படிப் பெயர் குறிப்பிடப் படவில்லை. மரியாளுக்கு அப்படிப்பட்ட முக்கியத்துவத் தைக் கொடுத்து முஹம்மது நல்லது செய்திருக்கிறார், ஆனாலும் இவ்வுலகில் வாழ்ந்த மிக முக்கியமான மனித ரான இயேசு கிறிஸ்துவின் தாயாராய் மரியாள் இருந்த படியால் அப்படிப்பட்ட கனத்திற்கு அவர் முற்றிலும் தகுதி யானவரே.

கடைசியாக தீதாத், வேதாகமத்தில் தவறு கண்டு பிடிக்கத் தருணம் பார்த்து எப்போதும் காத்திருந்து யோவான் 2:4-ல் இயேசு தம் தாயாரை 'ஸ்திரியே' என்று அழைப்பதைக் குறை கூறியுள்ளார். இயேசு தம் தாயாரிடம் அவமரியாதையாய் நடந்து கொண்டார் என்று குற்றஞ் சாட்டுகிறார் (இஸ்லாத்தில் இயேசு பக்கம் 19). இயேசு தம் தாயாரை 'அம்மா' என்று அழைத்திருந்தாலே பொருத்த மாயிருந்திருக்குமென்று அவர் யோசனை கூறுகிறார்.

வேதாகமம் குறித்த தமது அறியாமையையும் அது எழுதப்பட்ட காலம் குறித்த தமது அறியாமையையும் மீண்டும் தீதாத் வெளிப்படுத்துகிறார். ஏனெனில் அச்சமயம் 'பெண்மணி' என்னும் வார்த்தை 'மரியாதை மிக்க பிரியமான பெயராக' இருந்தது, இயேசு எப்பொழு தெல்லாம் பெண்களிடம் பேசினாரோ, இந்த வார்த்தையைத் தான் பயன்படுத்தினார். ஒரு வேதபாகத்தில் விபச்சாரத்தில் கையும் மெய்யுமாய் பிடிபட்ட ஒரு பெண்ணின்மேல் கல்லெறிய விரும்பிய யூதத் தலைவர்கள் அவளை இயேசுவிடம்



கொண்டு வந்து அவர் என்ன தீர்ப்பு சொல்வார் என அறிய முற்பட்டனர். அவர் அவர்களை நோக்கி உங்களில் பாவமில்லாதவன் எவனோ அவன் முதலாவது அவள் மேல் கல்லை எறியக்கடவன். (யோவான் 8:7). என்றார். அவர்கள் எல்லாரும் ஒருவர்பின் ஒருவராக அவ்விடம் விட்டுப் போன பின்பு அவர் அவளிடம் சாந்தமாகச் சொன்னார். ஸ்திரியே, அவர்கள் எங்கே? ஒருவனும் உன்னை ஆக்கினைக்குள்ளாக்கவில்லையா? (யோவான் 8:10) அதற்கு அவள் 'ஒருவனும் இல்லை ஆண்டவரே' என்றாள். அவர் பிரதியுத்தரமாக: 'நானும் உன்னை ஆக்கி னைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை, நீ போ, இனிப் பாவஞ் செய்யாதே' என்றார் (யோவான் 8:11) மனதுருக்க முடன் தமது இரக்கத்தின் கரத்தை நீட்டிய அதே வேளையில் அவளைப் 'ஸ்திரியே' என்று அழைத்தார். அது 'அவமரியாதையான' செயலா? அந்தப் பெயர் சுத்தமாக கனத்துக்கும் மரியாதைக்கும் உரிய பெயர், ஃபிரெஞ்சு மொழியில் 'மேடம்' என்பதைப் போலவும் ஆபிரிக்கான் மொழியில் 'டேம்' என்பதைப் போலவும் தான் இதுவும்.

சமாரியா ஸ்திரீக்கு ஆறுதல் சொன்னபோதும் அவர் இப்பெயரைப் பயன்படுத்தினார் (யோவான் 4:21) தாம் சிலுவையில் மரிக்கப்போகும் நிலையில் மீண்டும் தம் தாயை தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம் தாயை நோக்கி 'ஸ்திரியே இதோ உம்முடைய மகன்' (யோவான் 19:26) என்றார்.

பின்பு அவர் யோவானை நோக்கி, 'இதோ உன்

தாய்' என்றாய்; அந்நேரமுதல் அந்தச் சீஷன் 'அவரை தன் வீட்டில் ஏற்றுக்கொண்டான்' (யோவான் 19:27). இயேசு சிலுவையின் கொடுமைகளைச் சகித்த நேரத்திலும் தமது தாயாரை மறுக்கவில்லை. தம்மைப் பின்பற்றின சீஷர்களில் தமக்கு மிகவும் நெருக்கமான வரிடம் அவரைக் கனிவுடன் ஒப்படைத்தார். தாம் உயிர் தெழுந்த பின்பு அவர் தம்மைப் பின்பற்றின பெண் சீஷர்களில் மிக நெருக்க மானவரான மகதலேனா மரியாளுக்குத் தரிசனமான போது 'ஸ்திரியே' என்று தான் அவளை அழைத்தார் (யோவான் 20:15). இந்த மேற்கோள்களை வாசிக்கும் எவரும் இந்த 'ஸ்திரியே' என்றும் வார்த்தை மென்மையான மரியாதையான பெயரேயன்றி வேறல்ல என்ற முடிவுக்கு வருவார்கள்.

முடிவாக நாம் சொல்லக்கூடியது என்னவெனில் மரியாளின் வாழ்க்கை, மற்றும் குர்ஆனிலும் வேதாகமத் திலும் அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயர்கள் ஆகிய வற்றைக் குறித்துப் பேசுகையில் தீதாத் பரிதாபமாகக் குழம் பிப் போயுள்ளார் என்பதே. மரியாளுக்குரிய மரியாதை, அவருடைய வம்சவரலாறு மற்றும் வாழ்க்கை குறித்து வேதாகமம் சொல்லும் விவரங்களே மெய்யானவை என்பதில் சந்தேகம் ஏதுமில்லை.

**2. இயேசுவுக்குக் கொடுக்கப்பட்ட பிரத்தியேக பெயர்**

இயேசுவின் தாயாரைக் குறித்த தமது கூற்றுகளின் மூலம் வேதாகமத்தில் தமக்கு சொற்ப ஞானம் உண்டு என்பதை தீதாத் காண்பிப்பதுடன் கிறிஸ்துவாகிய இயேசு



வுக்கு வேதாகமத்தில் கொடுக்கப் பட்டுள்ள பெயர் குறித்து அவர் கூறியுள்ள சுருக்கமான அறிக்கையிலும் அந்த அறியாமை காணக்கிடக்கிறது. அசல் எபிரேயப் பெயராகிய மசஹா (இதிலிருந்துதான் மஷியா அதாவது மேசியா அல்லது கிறிஸ்து என்பது வந்தது) என்பது ஆராதனை செய்வதற்கென பிரதிஷ்டிக்கப்பட்ட ஆசாரியர்கள், தூண்கள், ஆசரிப்புக் கூடாரங்கள், இன்ன பிறவற்றைக் குறிக்கப் பயன்பட்ட, எவ்வித அபிஷேகத்தையும் குறிக்கும் பொதுவான ஒரு வார்த்தை என்று சுட்டிக்காட்டுகிறார் அவர்.

வேதாகமத்தில் இயேசு மேசியா என்று அழைக் கப்படுவது அல்லது கிரேக்க மொழியில் அது 'கிறிஸ்தொஸ்' என்று வழங்குவது அப்பெயர் அவருக்குரிய பிரத்யேகப் பெயர் என்று சொல்லமுடியாது, ஏனெனில் 'தேவனுடைய தீர்க்கதரிசி ஒவ்வொருவரும் அப்படி அபிஷேகப் பண்ணப்பட்டு அல்லது நியமிக்கப்பட்டு இருக்கிறார்' (இஸ்லாத்தில் கிறிஸ்து, பக்கம் 13) என்று அவர் வாக்குவாதம் செய்கிறார்.

அவர் மேலும் கூறுகிறார். இஸ்லாத்தில் சில தீர்க்க தரிகளுக்கு சில பெயர்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும் பொதுவான ஒரு அர்த்தத்தில் அவை எல்லாத் தீர்க்கதரி களுக்கும் பொருந்தும். முஹம்மது ரசூலுல்லா (அல்லாஹ் வுடைய தூதர்) என்றும் மோசே கலிமல்லா (அல்லாஹ் வுடைய வார்த்தை) என்றும் அழைக்கப்படுகின்ற போதிலும், எல்லாத் தீர்க்கதரிசிகளும் இறைவனுடைய

தூதர்கள், அவர்களுடன் இறைவன் அவ்வப்போது பேசியி ருக்கிறார் என்பதால் அவர்களுக்கும் இப்பெயர்கள் பொருந்தும். ஆகவே 'கிறிஸ்தொஸ்' என்றும் பெயர் இயேசுவுக்கு பிரத்யேகமானதல்ல, அதே போல வேறெந்த தீர்க்கதரிசியினின்றும், அவர் வித்தியாசமானவருமல்ல என்று அவர் முடிவாகக் கூறுகிறார்.

இங்கே தீதாத்தின் அறியாமை மீண்டும் வெளிப்படு கிறது, ஏனெனில் வேதாகமத்தில் இயேசுவுக்குத் தரப்பட்டுள்ள (அசல் கிரேக்க மொழியில்) 'ஹோ கிறிஸ்தொஸ்' என்ற பெயருடைய பொருள் 'தி கிரைஸ்ட்' என்பதாகும். இங்கு உறுதிச் சுட்டுருபு பயன்படுத்தப்பட்டி ருப்பதால் இந்தப் பெயர் மெய்யான அர்த்தத்தின்படி பிரத் யேகமானது என்றும் மெய்யாகவே வேறு எந்தத் தீர்க்க தரிகளுக்கும் இல்லாத விதத்தில் அபிஷேகம் பண்ணப் பட்டதான மேசியா இயேசுவே என்றும் ஆகிறது. இதே குர்ஆனிலும் காணப்படுகிறது. அதில் இயேசு 'அல்-மஸிஹ்' என்று அழைக்கப்படுகிறார். அதாவது இந்தப் பெயருக்குப் பொருந்தக்கூடிய ஒரே ஒருவராக அவர் கூறப் பட்டுள்ளார்.

உண்மையில் குர்ஆனில் இயேசு ஒரு ரசூல் என்றும் குறைந்தது பத்துமுறையாவது அழைக்கப்பட்டிரு க்கிறார். (உதாரணமாக ஸூரா 4:171-ல் அவர் வெளிப் படையாக 'ரசூலுல்லாஹ்' என்று அழைக்கப்பட்டுள்ளார்) ஸூரா 3:45-ல் 'கலிமத்திம் மின்ஹு' அதாவது 'அவரிடத்திலிருந்து வந்த ஒரு வார்த்தை' என்று அழைக்



கப்பட்டுள்ளார். ஆனால் 'அல்-மஸிஹ்' என்னும் பெயர் அதாவது 'மேசியா' இயேசுவுக்கு மட்டுமே குர்ஆனில் வழங்கப்பட்டுள்ளது, அதேபோல 'ஹோ கிறிஸ்தொஸ்' என்னும் பெயரும் வேறு யாருக்கும் வேதாகமத்தில் வழங்கப்படமுடியாது. இயேசுவானவர் தனித்துவமான வகையில் மேசியாவாக விளங்குகிறார். அதாவது அப் பெயர் அவருக்கு மட்டும் உரியது.

இயேசுவை ஒரு சாதாரண தீர்க்கதரிசியின் நிலைக் குத் தரம் தாழ்த்துவதே உண்மையில் தீதாத்தின் நோக்கம். இப்படியாக இந்த தனித்துவமான பெயரான மேசியா (கிறிஸ்து) அவருக்கு விசாரமான, குற்றபோத முள்ள பெயராக அவருக்குத் தோன்றியது. ஆனாலும் இப்பெயர் இயேசுவுக்குப் பிரத்யேகமாக உரிய பெயராக ஒருபோதும் இருக்கவில்லை என்ற தவறான யூகத்தின் அடிப்படையிலேயே இந்தத் தர்க்கம் அவரால் எழுப்பப்பட்டது.

இயேசுவை அல்-மஸிஹ் என்று பொருத்தமாக அழைக்கும் குர்ஆன் அப்பெயரை விளக்க எவ்விதமும் முயற்சிக்கவில்லை அப்படியானால் அதன் சரியான பொருள்தான் என்ன? மேசியாவின் பதவியை சாதாரண தீர்க்கதரிசிகளின் நிலவரத்துக்கும் மேலானதாக்குகிறார் கள் என்று தீதாத் விருப்பத்துடன் கற்பனை செய்வதுபோல 'சாதாரண உலோகத்தை மின்னுகிற பொன்னாக' (இஸ்லா த்தில் கிறிஸ்து, பக்கம் 13) மாற்றுவதற்கு கிறிஸ்தவர்களின் முயற்சி அவசியமேயில்லை. வரப்போகும் ஒரு பெரும்

தலைவரைக் குறித்து, தங்கள் வேதாகமத்தில் அவரை அப்படி அழைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறபடி மேசியா என்று அவரைப் பெயரிட்டுப் பேசினவர்கள் யூதர் களே (தானியேல் 9:26) முந்தின தீர்க்கதரிசிகளால் எழுதப் பட்ட வேதவாக்கியங்கள் யாவற்றிலும் அவர்கள் தேவனாலே, அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவருடைய, சாதாரணர் தீர்க்கதரிசியாய் அல்லாமல் முழு உலகத்துக் கும் இரட்சகராய் விளங்கப்போகும் ஒருவருடைய வருகை முன்னறிவிக்கப்பட்டுள்ளதைக் கண்டார்கள். (உதாரணங் கள் ஏசாயா 7:14; 9:6-7, 42:1-4, எரேமியா 23 5,6; மீகா 5:2-4; சகரியா 6:12,13). அவர் தேவனின் இராஜ்யத்தை நியாயத்திலும் நீதியிலும் என்றைக்குமாக ஏற்படுத்தி ஜாதி கள் மேல் அரசாளுவார். முதலாவதாக அவர் தாழ்த்தப் படுவார் (தானியேல் 9:26), ஆனால் காலத்தின் முடிவில் அவர் திரும்ப வரும்போது அவர் தேவனுடைய இரட்சிப்பை யும் நியாயத்தீர்ப்பையும் கொண்டுவருவார், தம்முடைய நீதியுள்ள மக்கள் மேல் நீதியோடும் மகிமையோடும் ஆளுகை செய்து, உலகெங்கிலுமுள்ள தமது சத்துருக்க ளைத் தமக்குப் பாதபடியாக்கிப் போடுவார். (சங்கீதம் 110:1)

இந்த உயர்ந்த நபராகிய மேசியா வருவார் என்பதை யூதர்கள் அறிந்திருந்தனர், இயேசு வந்தபோது அது மேசியாவாக இருக்கக் கூடுமோ என்று யூகித்தனர். (யோவான் 7:31, 41-43, 10:24; மத்தேயு 26:63). தாமே மேசியா என்று அநேக சந்தர்ப்பங்களில் அவர் வெளிப் படையாகவே உறுதிப்படுத்தியுள்ளார் (யோவான் 4:26; மத்தேயு 16:17; மாற்கு 14:62), மேலும் தாம் மேகங்கள்



மேல் வல்லமையோடும் மகிமையோடும் திரும்புவதாகவும் தாம் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதை அவர் கள் காண்பார்களென்றும் யூதர்களிடம் அவர் கூறினார். (மத்தேயு 26:64). இயேசுவை தேவன் அனுப்பிய நித்திய இரட்சகராகவும், மேசியாவாகவும் உயர்த்த தீதாத்தின் கற்பனையான கிறிஸ்தவ வார்த்தை ஜாலம் தேவை யில்லை (இஸ்லாத்தில் கிறிஸ்து, பக்கம் 13) யூதர்கள் தாமே மேசியா மற்ற தீர்க்கதரிசிகள் போல் ‘சாதாரண உலோகம்’ கொண்டு செய்யப்படாமல் மெய்யாகவே மின்னும் பொன் கொண்டு செய்யப்பட்டவர் என்று அறிந்திருந்தனர். இயேசு அப்படித்தான் மின்னும் பொன்னாயிருந்தார்.

யூதர்கள் துக்ககரமாகத் தங்களுடைய நம்பிக்கை யின் நிறைவேறுதலான மேசியாவைப் புறக்கணித்து விட்ட னர், அதனால் சீக்கிரமாகவே அவர்கள் சங்கரிக்கப்பட்ட னர். (கி.பி.70ல்), இன்றுவரை அவர்களுடைய மதமானது தனது அசல் அர்த்தத்தையும், மகிமையையும் இழந்து போயிற்று. இதைவிட அதிக முரணான பரிதாபம் என்ன வெனில் ஒரு பக்கம் இயேசு உண்மையில் மேசியாதான் என்று ஒப்புக்கொள்வதும் மறுபக்கம் அவர் ஒரு தீர்க்க தரிசி மட்டுமே என்று கூறுவதுமான முஸ்லிம் உலகின் மனப்பாங்கு. இப்பெயரின் முழுமையான அர்த்தமும் இஸ்லாத்தில் முற்றிலும் தவறவிடப்பட்டுள்ளது.

இயேசு கிறிஸ்து இவ்வுலகின் ஒரே இரட்சகரும், ஜாதிகளைக் குணமாக்கும்படி தேவன் அனுப்பிய ஒரே மேசியாவுமாயிருக்கிறார். அந்தப் பெயர் அவர்

ஒருவருக்கு மட்டுமே அனுபவிக்கும் பதவிக்கு அவரை அது உயர்த்தி யுள்ளது. அதாவது நித்திய முழுமையும் அரசாளப் போகும் மகிமையின் இராஜா.

### 3. இயேசுவின் பிறப்பு குறித்த ஒரு கண்ணோட்டம்.

கிறிஸ்தவ வேதாகமத்திற்கு எதிராக தீதாத்தின் தப் பெண்ணம் இயேசுவின் உற்பவம் மற்றும் பிறப்பு குறித்த அவருடைய கருத்து மூலம் மேலும் வெளியாகிறது. லூக்கா 1:35ல் காபிரியேல் தூதன் மரியாளிடம் 'பரிசுத்த ஆவி' அவர்மேல் வருவார், உன்னதமானவரின் பலம் அவர் மேல் நிழலிடும் என்றும் கூறியுள்ள வார்த்தைகளை அவர் குறிப்பிட்டு, அவற்றைக் குறித்து பின் வரும் வார்த்தை களால் குறிப்பிடுகிறார்.

இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகள் விரும் பத்தகாதவைகள்–அருவருப்பான (சாக்கடை போன்ற) வார்த்தைகள்–ஒத்துக்கொள்கிறீர்களா? (இஸ்லாத்தில் கிறிஸ்து, பக்கம்24)

அவருடைய புத்தகத்தில் '**சாக்கடை வார்த்தைகள்**' என்பது பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட்டுள்ளது. அழகு என்பது பார்ப்பவரின் கண்ணில் இருக்கிறது என்று யாரோ சொல்லியிருக்கிறார். இந்தக் கூற்று உண்மையே எனத் தோன்றுகிறது. இயேசுவின் உற்பவத்தில் ஏதோ ஒழுக்கக் கேடு இருப்பதுபோல தீதாத் குறிப்பிடுகிறார். அவ்வசனத்தின் மீதமுள்ள பகுதியான ஆகையால் உன்னிடத்தில் பிறக்கும் குழந்தை பரிசுத்தமுள்ள குழந்தை என்றும் தேவனுடைய குமாரன் என்றும் அழைக்கப்படும் என்பதை அவர் மிகக்



குறிப்பாக விட்டு விட்டிருக்கிறார். (லூக்கா 1:35). அந்த முழு வசனமும் பிரமிக்கத்தக்க விதத்தில் பரிசுத்தம் பொதிந்த தாக எழுதப்பட்டுள்ளது. இந்தக் குழந்தை பாவமாம்ச சம்பந்தமில்லாமல், பரிசுத்த ஆவியின் வல்லமையினால் உற்பவிப்பதால், அக்குழந்தை மற்ற எல்லா மனிதரைப் போல அசுத்தமானதாகவோ பாவமுள்ளதாகவோ இராமல் பரிசுத்தமுள்ளதாகவும், தேவனுடைய குமாரனாகவும் விளங்கும். இதில் ருசிகரமற்ற (விரும்பத்தகாத) வார்த்தை கள் எங்கேயிருந்து வந்தது என்பது புரிந்து கொள்ள முடியாதது. இயேசுவின் பரிசுத்தமே அவர் தெய்வீக வல்ல மையினால் உற்பவிப்பதற்குக் காரணம் என்று குர்ஆன் தானே போதிக்கிறது (ஸூரா 19:19). இங்கு இந்த வசனத்தைக் குறிப்பிடுவது பொருந்தும்:

'சுத்தமுள்ளவர்களுக்கு சகலமும் சுத்தமாயிருக் கும் ஆனால், கெட்டுப்போனவர்களுக்கும் அவிசுவாசி களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது. அவர்களுடைய மனதும் மனச்சாட்சியுமே கெட்டுப் போயுள்ளது'. (தீத்து 1:15)

பரிசுத்த ஆவி மக்கள்மேல் வருவதை லூக்கா சுவிசேஷத்தில் பல இடங்களில் வாசிக்க முடியும்; ஒவ்வொரு முறையும் தேவனுடைய பரிசுத்த ஆற்றலின் அபிஷேகமாக அது வெளிப்பாடு குறிக்கிறது. சிமியோன் 'நீதியும் தேவபக்தியுமுள்ள' ஒரு மனிதனாயிருந்தார்; 'பரிசுத்த ஆவி அவர் மேலிருந்தது' (லூக்கா 2:25). இயேசு வானவர் திருமுழுக்கு பெற்று ஜெபம் பண்ணுகையில் 'பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்' (லூக்கா 3:22).

அதே போல இயேசு மறுரூபமடைந்தபோது அவர் மேல் தேவனுடைய மகிமை காணப்பட்டது, 'ஒரு மேகம் அவர் மேல் நிழலிட்டது' (லூக்கா. 9:34) என்று வாசிக்கிறோம். அதேபோல இயேசுவின் உற்பவம் குறித்து 'பரிசுத்த ஆவி மரியாளின் மேல் வந்தது' உன்னதமானவருடைய பலம் அவர்மேல் 'நிழலிட்டது' என்று சொல்லும்போது அதை விரும்பத்தகாத (ருசிகரமற்ற) வார்த்தைகள் என்றும் சாக்கடை வார்த்தைகள் என்றும் ஒருவர் எப்படிச் சொல்லலாம்?

கிறிஸ்துவாகிய குழந்தை உற்பவிக்கும் முறை குறித்து விவரிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகள், வேதாகமத்தில் ஒரு மனிதன் மேல் தேவனுடைய மெய்யான வல்லமை மற்றும் பரிசுத்தத்தின் அபிஷேகம் இறங்கும் எந்தச் சந்தர்ப்பத்தை விவரிக்கவும் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன. தீதத்தின் தர்க்கத்துக்கு மெய்யான காரணம் எது என்று நாம் காண முடியாது, கிறிஸ்தவ விசுவாசத்துக்கு எதிராக அர்த்தமற்ற குற்றச் சாட்டுக்களை எழுப்பும்படி தப்பெண்ணம் கொண்டிருந்தார் என்று எண்ணத் தோன்றுகிறது. வேதாகமத்தில் உள்ள இயேசுவின் பிறப்பு குறித்த விவரங்களை குர்ஆனிலுள்ள அதே விவரத்துடன் பொருத்தமற்ற விதத்தில் ஒப்பிட அவர் முயற்சிப்பதும் வியர்த்தமாகிறது, ஏனெனில் அவர் கூறுகிறார்.

இறைவன் ஒரு இயேசுவை மனித தகப்பன் இல்லாமல் படைக்க, அவர் வெறுமனே அதை



விரும்பினால் போதும். அவர் பத்து இலட்சம் இயேசுக் களை தகப்பன் அல்லது தாய் இல்லாமல் படைக்க வேண்டு மானால், அவர் வெறுமனே அவர்களை உண்டாக்குவார்களாக என்று விரும்பினால் போதும் (இஸ்லாத்தில் கிறிஸ்து, பக்கம் 24).

இது-ஏன் இறைவன் பத்து இலட்சம் இயேசுக்களை தகப்பன்களோ தாய்களோ இல்லாமல் படைக்கவில்லை? என்ற வெளிப்படையான கேள்வியை எழுப்புகிறது. ஒரேயொரு மனிதன் மட்டுமே இவ்விதத்தில் உண்டாக்கப் பட்டார் என்ற உண்மை தகப்பன் இல்லாமல் அநேகர் இப்படி உண்டாக்கப்படவேண்டும் என்பது தேவனுடைய விருப்பமல்ல என்பதைக் காண்பிக்கிறது. மாறாக இந்த விதத்தில் ஒரேயொரு பிரத்யேக நபர் மட்டுமே பிறப்பிக்கப் படவேண்டுமென்பதே தேவனுடைய வெளிப்படையான விருப்பம் என்பது தெளிவு. இயேசுவாகிய இவர் இந்த விதத்தில் உற்பவிப்பதற்கு மிக விசேஷமான ஏதோ ஒன்று இருக்க வேண்டும் என்ற சத்தியத்தையும் இது உண்டாக்கு கிறது. தீர்க்கதரிசிகள் உட்பட எல்லா மனிதருக்கும் இயற்கையான தாய்களும் தகப்பன்களும் உண்டு. இயேசு வுக்கு மனித தகப்பன் இல்லாததற்கு ஒரேயொரு காரணம் மட்டுமே உண்டு. நித்திய பிதாவின் குமாரனாக அவர் இருப்பதால், மனித குறுக்கீடு எதுவுமின்றி தேவனுடைய ஆவியின் பலத்தால் உற்பவித்துதான் வழக்கத்துக்கு மாறான வழியில் அவர் மனித உருவில் அவதரிக்க வேண்டும் என்பது அவசியமாகிறது. மெய்யாகவே இது அதிக வெளிப்படையாகவுள்ளது.

குர்ஆனில் ஸீரா 3:59 குறித்து யூசுஃப் அலி மொழி பெயர்த்து வியாக்கியானம் செய்வதை மேற்கோள் காட்டுவதும் தீதத்துக்கு உதவியாயிற்று. அதில் வியாக்கி யானி கூறுகிறார். ஆதாமுக்கு தகப்பனோ தாயோ இல்லை யாதலால், தேவனுடைய குமாரன் என்று (தீதத் தனது நூலின் 26ம் பக்கத்தில் யோசனை கூறியுள்ளது போல) அழைக்கப்படுவதற்கு அதிக உரிமையுள்ளவர். ஆதாம் முழுமையான மனிதனாக சிருஷ்டிக்கப்பட்டார், ஏனெனில் மனிதப் பெற்றோர் மூலமாகப் பிறப்பது அப்பொழுது அசாத்தியமானது. முந்தி யாராவதொருவர் சிருஷ்டிக்கப் படவேண்டியதாயிருந்தது. ஆனால் பல நூற்றாண்டுக ளாக தேவன் ஏற்படுத்திய இயற்கையான இனப்பெருக்க முறை நடைமுறையில் இருந்தபோது இயேசு ஒரு பெண்ணிடத்தில் தனித்தன்மையுள்ள முறையில் பிறந்தார். ஆதாமுக்கு தகப்பனனோ தாயோ இல்லை என்பது வெளிப்படையான விஷயம். ஆனால் இயேசு ஒரு தாய் மூலமாக மட்டுமே பிறக்கத்தக்கதாக இயற்கையான இனப்பெருக்க முறையின் இடையில் தேவன் குறுக்கீடு செய்யக் காரணமென்ன? ஆதாமுக்கும் இயேசுவுக்கு முள்ள வேறுபாடுகளை முழுமையாக எடுத்துக் காட்டும் பின்வரும் வேதாகம விளக்கத்துக்கு நியாயமான மாற்று ஏதுமில்லை.

'முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணான மனுஷன்; பிந்தின ஆதாமோ வானத்தி லிருந்து வந்தவர்' (1 கொரிந்தியர் 15:47)



ஆதாம் சாதாரண இயற்கையான ஒரு மனிதன், தேவன் ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். இயேசுவோ ஒரு நித்தியமான ஆள்த்துவம், ஜீவனைக் கொடுக்கும் ஒரு ஆவி. அவர் வானத்திலிருந்து வந்த வராகையால் அவருடைய உற்பவத்தில் இயற்கையான பூமிக்குரிய மனித இனப்பெருக்க முறையில் ஒரு தெய்வீக் குறுக்கீடு ஏற்படவேண்டியதாயிருந்தது. அவர் ஜீவ சுவாச மாயிருக்கிறார், அவரை விசுவாசிக்கிறவர்கள் நித்திய ஜீவனைப் பெற்று ஏற்ற காலத்திலே அவருடைய பரம சாயலுக்கு ஒப்பாக மறுரூபமாக்கப்படுவார்கள்.

**4. மெல்கிசேதேக்-வரப்போகிற கிறிஸ்துவின் ஒரு மாதிரி**

இயேசுவுக்கும் அவருடைய முன்னோடியான மெல் கிசேதேக்குக்கும் உள்ள ஒற்றுமையைக் குறித்து தீதாத் எழுதியுள்ள விதம் குறித்து நாம் இப்போது கவனிப்போம். மெல்கிசேதேக் 'இயேசுவை விடப் பெரியவரான வேறொரு நபர்' என்று அவர் கூறுகிறார். (இஸ்லாத்தில் கிறிஸ்து, பக்கம் 26). எபிரேயர் 7:3ஐ அவர் மேற்கோள் காட்டுகிறார். மெல்கிசேதேக் தகப்பனும் தாயும் வம்ச வரலாறும் இல்லாத வர்; நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவும் இல்லாதவர் என்று அவ்வசனம் கூறுகிறது இந்தக் கூற்று முடியுமிடத்தில் தீங்கற்ற தோற்றமுடைய மூன்று புள்ளிகள் தீதாத்தின் புத்தகத்தில் காணப்படுகின்றன (பக்கம் 26).

இந்த அசாதாரண புள்ளிகள் தீதாத் எழுதிய மற்ற புத்தகங்களிலும் இது காணப்படுகிறது எனவே இது வழக்கத்திற்கு மாறான ஒன்றல்ல இந்த நூல்களின்

வரிசையில் முதலாவதான 'கிறிஸ்து சிலுவையிலறையப் பட்டார் இது உண்மை கட்டுக்கதை அல்ல – காண்க). தீதத்தின் இஸ்லாமிய பரப்புரை மையம் வெளியிட்டுள்ள கைப்பிரதிகளில் கூட இந்த புள்ளிகளைக் காணலாம். இந்த மூன்று புள்ளிகளும் மாற்றமில்லாமல் மேற்கோள் காட்டப்படும் வசனபகுதியிலிருந்து மிகக் கவனமாக தீதாத் தாம் எழுப்பும்படி முயற்சித்த தர்க்கத்துக்கு அவை மறுப்பு தெரிவிப்பவைகளாக இருந்தால் விட்டுவிட்ட வார்த்தை களைக் குறிக்கின்றன. உண்மையிலேயே குறிப்பிடத்தக்க நூதன காரியம் இது! நாம் இங்கே அந்த வசனப்பகுதியை முழுமையாக எபிரேய நிருபத்திலிருந்து எழுதுவோம். மேலும் தீதத்தினால் தற்செயலாக மறைக்கப்பட்டு மூன்று புள்ளிகளால் இடமாற்றம் செய்யப்பட்ட வார்த்தைகளை சாய்வு எழுத்துக்களில் தருகிறோம்.

இந்த மெல்கிசேதேக்கு சாலேமின் இராஜாவும் உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தான். இராஜாக்களை முறியடித்துவந்த ஆபிரகாமுக்கு இவர் எதிர் கொண்டுபோய் அவனை ஆசீர்வதித்தான் இவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான் இவர் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவர்; இவர் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவரா யிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவராய் என்றென்றைக்கும் ஆசாரியராக நிலைத்திருக்கிறார். (எபிரெயர் 7:1–3)

முடிவிலே காணப்படும் சாய்வு எழுத்து வாக்கியம்



தீதாத் எழுப்ப முயற்சிக்கிற விஷயத்தை வெளிப்படை யாகவே மறுக்கிறதாயிருக்கிறது. அதாவது அவர் மெல்கி சேதேக் 'இயேசுவைக் காட்டிலும் பெரியவர்' என்று காண்பிக்க அவர் முயற்சிக்கிறார். ஆனால் அவர் தேவ குமாரனுக்கு ஒப்பானவர் என்று மட்டுமே இங்கு சொல்லி யிருக்கிறது. இப்படியாக அவர் வரப்போகிற நித்திய பிரதான ஆசாரியருக்கு ஒரு முன்னோடியாகவும், ஒரு மாதிரியாக வும், ஒரு நிழலாட்டமாகவும் ஒரு அளவுக்குட்பட்ட உதாரண மாகவும் விளங்குகிறார்.

ஆதியாகமம் 14ம் அதிகாரத்தில் ஒரு சிறிய வேத பகுதியில் மெல்கிசேதேக் குறித்து எழுதப்பட்டுள்ளது. அவர் சாலேமின் இராஜா என்று குறிப்பிடப்பட்டுள்ளார். இராஜாக் களை முறியடித்துத் திரும்பின ஆபிரகாமை அவர் எதிர் கொண்டுபோய் ஆசீர்வதித்தார். அவர் உன்னதமான தேவனுடைய ஆசாரியன் என்று விசேஷமாகக் குறிப்பிடப் பட்டுள்ளார். (ஆதியாகமம் 14:18). அவரைப் பற்றி வேறு விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

எபிரெயர் நிரூபத்தில் முன்வைக்கப்பட்டுள்ள விவாதம் என்னவென்றால் இயேசுவானவர் ஆரோனின் முறைமையின்படி வந்த ஒரு லேவிய ஆசாரியர் அல்ல. ஆனால் மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஒரு நித்திய பிரதான ஆசாரியர் என்பதே. மெல்கிசேதேக் துவக் கமும் முடிவும் இல்லாதவர் என்று சொல்லியிருப்பதால் முழுமையான அர்த்தத்தில் துவக்கமோ முடிவோ இல்லாத

நித்தியமானவரான இயேசுவுக்கு இவர் முன்னடையாள மாயிருக்கிறார் என்பதே அதன் பொருள். மெல்கிசேதேக் தேவகுமாரனுக்கு ஒப்பானவர். இந்த விஷயத்தை தீதாத் தந்திரமாக மறைக்கிறார். மேலும் மெல்கிசேதேக் உன்னத மான தேவனுடைய ஆசாரியன் என்றும் அழைக்கப் படுகிறார், ஆபிரகாம் இவருக்கு எதிர்கொண்டுபோய் தசமபாகம் செலுத்தினார் என்பது வரப்போகிற மெய்யான தேவ ஊழியரான இயேசு கிறிஸ்துவுக்கு இவர் ஒரு மாதிரி என்று காட்டுகிறது.

**5. இயேசு ஜீவனுள்ள தேவனின் நித்திய குமாரன்**

தீதாத்தின் புத்தகத்தில் பிந்தைய பகுதியில், இயேசு தேவகுமாரன் என்னும் கிறிஸ்தவ உபதேசத்திற்கு வேதாகம போதனைக்கு எதிராக இரக்கமற்ற சில நேரங் களில் விகாரமான தாக்குதலைக் கொண்டதாயிருக்கிறது. ஆயினும் குறைந்தது ஒரு விஷயத்திலாவது இயேசுவான வர் மிகப் பிரதானமாக தேவனுடைய குமாரன் என்று தீதாத் ஒப்புக்கொண்டாக வேண்டும். (இஸ்லாத்தில் கிறிஸ்து, பக்கம் 29). வேதாகமத்தில் பொதுவாக தேவனுடைய பிள்ளைகள் என்று மக்கள் அழைக்கப்படும் இடங்களில் பலமுறை தேவகுமாரன் என்னும் வார்த்தை காணப்படு கின்றது என்று காண்பிக்க 28ம் பக்கத்தில் பல வசனங்களை அவர் காண்பிக்கிறார். எனவே கிறிஸ்து தம்மை தேவகுமாரன் என்று உருவகமாக மட்டுமே சொல் லுகிறார், கிறிஸ்தவர்களோ அவர் தேவனுடைய நித்திய குமாரன் என்று தவறாகக் கூறுகின்றனர் என்று சொல்லி



முடிக்கிறார்.

இயேசு கிறிஸ்து தனித்துவமிக்க முறையிலும் முழுமையான அர்த்தத்திலும் தேவனுடைய குமாரன் என்று காண்பிக்கும் ஏராளமான வேதாகமச் சான்றுகளை காணாது விட்டாலொழிய எவரும் இப்படிப்பட்ட ஒரு முடிவுக்கு வருவது சாத்தியமல்ல. எண்ணற்ற சந்தர்ப்பங் களில் இவ்விஷயத்தை ஆழமாகச் சித்தரிக்கும் வாக்கியங் களை இயேசு பேசியிருக்கிறார். பின்வரும் வசனத்தைக் கவனியுங்கள்.

சகலமும் எனக்கு என் பிதாவினால் கொடுக்கப் பட்டிருக்கிறது; பிதா தவிர ஒருவரும் குமாரன் யாரென்று அறியார்; குமாரனும், குமாரன் தாம் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனுக்குத் தவிர பிதாவை ஒருவரும் அறியார். (லூக்கா 10:22)

யூதர்கள் ஒரு முறை சாட்சியிட்டது போல இந்த மனுஷன் பேசியதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசிய தில்லை (யோவான் 7:46). தன்னை அடையாளப்படுத்த வேறெந்தத் தீர்க்கதரிசியும் இப்படிப்பட்ட வாக்கியங்களைக் கையாண்டதில்லை. எல்லாக் காரியங்களும் தமக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருப்பதாகவும், குமாரன் ஒருவனுக்கு வெளிப்படுத்தினாலொழிய ஒருவரும் பிதாவை அறிய முடியாது என்றும் இயேசு கூறுகிறார். அதேபோன்று தம்மை தேவனுடைய குமாரனென்று முழுமையான அர்த் தத்தில் கருதினார் என்று காண்பிக்கும் ஒரு வசன பகுதி,

மற்ற பல வசனபகுதிகளைப் போல தீதத்தினால் வேண்டு மென்றே கண்டுகொள்ளப்படாத ஒரு வசன பகுதி இதோ.

**பிதாவானவர் தாமாய் ஒருவரையும் நியாயந் தீர்க் காமல் நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்குக் கொடுத்திருக்கிறார். எல்லாரும் பிதாவைக் கனம் பண்ணுவதுபோல குமாரனையும் கனம் பண்ணும் படியாக அப்படிச் செய்தார். குமாரனைக் கனம் பண்ணாதவன் எவனோ அவன் அவரை அனுப்பிய பிதா வையும் கனம் பண்ணாதிருக்கிறான் (யோவான் 5:22,23)**

தீதத் சொல்வதுபோல நாமெல்லாரும் தேவனு டைய பிள்ளைகளென்றால் (பக்கம் 29) எல்லா மனுஷரும் பிதாவைக் கனம் பண்ணுவதுபோல தம்மை தேவகுமாரன் என்று கனம் பண்ணவேண்டும் என்று இயேசு கூறியது ஏன்? இயேசு தம்மைத் தனித்துவமான நித்தியமான தேவகுமாரனாகக் கருதினார் என்று காண் பிக்கும் போதனைகளை நாம் சுவிசேஷங்கள் முழுவதிலும் காணலாம். ஒரு சந்தர்ப்பத்தில் அவர் ஒரு வீட்டெஜமான் திராட்சத்தோட்டத்தை நட்டு அதைத் தோட்டக்காரருக்குக் குத்தகையாக விட்டுப்போனதைப் பற்றிய உவமையைக் கூறினார். கனிகளுக்கான காலம் வந்தபோது கனிகளைப் பெற்றுக்கொண்டு வரும்படி தன் ஊழியக்காரரை தோட்டக் காரரிடத்தில் அனுப்பினான் அந்த எஜமான் அந்தக் குத்தகைக்காரரோ முதலாவதாக வந்த வேலைக்காரனை அடித்தும், இரண்டாவதாக வந்த வேலைக்காரனை அவமானப்படுத்தி அடித்தும் மூன்றாவதாக வந்த



வேலைக் காரனை காயப்படுத்தியும் வெறுங்கையாய்த் துரத்தி விட்டனர். திராட்சத் தோட்ட எஜமான் அப்போது தனக்குள்ளே சொல்லிக் கொண்டதாவது:

நான் என்ன செய்யலாம்? நான் என் பிரியமான மகனை அனுப்புவேன்; ஒருவேளை அவனுக்கு மரியாதை காண்பிப்பார்கள் (லூக்கா 20:13)

ஆனால் குத்தகைக்காரர்கள் அவனைக் கண்ட போது, அவனைப் புறக்கணித்து திராட்சத் தோட்டத்திற்கு வெளியே தள்ளி கொன்று போட்டனர். அந்தத் திராட்சைத் தோட்ட எஜமான் அந்தக் குத்தகைக்காரரை அழித்து, தோட்டத்தை வேறு மனுஷர்களுக்குக் கொடுத்தான் என்று சொல்லி இயேசு அந்த உவமையை முடிக்கிறார். உடனடி யாக யூதர்கள் அவர் அந்த உவமையைத் தங்களுக்கு எதிராகக் கூறினார் என்று அறிந்து கொண்டனர். (லூக்கா 20:19) அந்த யூகம் சரியானது அதன் வியாக்கியானம் வெளிப்படையானது. தேவன் யூதர்களைத் தாம் அவர் களுக்குச் சுதந்திரமாகத் தந்த தேசத்திலே குடியிருக்கும் படி செய்தும், அவர்கள் தொடர்ந்து அவருக்கு விரோத மாகக் கலகம் பண்ணினார்கள். தேவன் தமது ஊழியக் காரராகிய தீர்க்கதரிசிகளை அனுப்பினார். ஆனால் அவர் கள் இவர்களைப் புறக்கணித்து பல முறை கடுமையாய் நடத்தினார்கள். அதன் பிறகு இயேசுவைத் தங்கள் நடுவேயிருந்து அகற்றிக் கொன்றுபோட்டபின்பு தேவன் அவர்கள் மேல் அழிவைக் கொண்டுவந்தார், அவர்கள் தங்கள் தேசமாகிய பலஸ்தீனாவிலிருந்து வேறறுக்கப்

பட்டு, எருசலேம் பட்டணம் குப்பை மேடானது (இது இயேசு பரமேறி நாற்பது ஆண்டுகளுக்குப் பின்பு ரோமத் தளபதி யான தீத்துவின் தாக்குதலின்போது நடந்தது)

இந்த உவமையில் முக்கிய விஷயம் முந்தி அனுப்பப்பட்ட தூதுவர்கள் வெறும் ஊழியக்காரராக இருக்க கடைசியில் அனுப்பப்பட்ட தூதுவர் எஜமானனின் பிரியமுள்ள குமாரன் என்ற அடையாளம் தான். இயேசு தமக்கு முந்தின தீர்க்கதரிசிகளிலிருந்து தம்மைத் தெளிவாக இந்த உவமையில் வேறுபடுத்திக் காண்பிக்கி றார்; அவர்கள் வெறுமனே தேவனுடைய ஊழியக்காரர் களாக இருக்கையில் தாம் அவருடைய பிரியமான குமாரன் என்பதைக் காண்பிக்கிறார். இரண்டு இடங்களில் தேவன் தாமே பரலோகத்திலிருந்து இயேசுவைக் குறித்துப் பேசி இதை உறுதிப்படுத்துகிறார்.

இவர் என்னுடைய நேசகுமாரன்; இவரில் பிரியமாயிருக்கிறேன். (மத்தேயு 3:17)

வேறொரு முறை இயேசு தம்முடைய சீஷர்களைப் பார்த்து ஜனங்கள் தம்மைக் குறித்து என்ன நினைக்கிறார் கள் என்று கேட்டார். பொதுவாக ஜனங்கள் அவரைத் தீர்க்க தரிசிகளில் ஒருவர் என்று நினைக்கின்றனர் என்று அவர்கள் பதில் கூறினார்கள். சீஷர்களாகிய அவர்கள் தம்மை யாரென்று நினைக்கிறார்கள் என்று அவர் கேட்டபோது பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து (மத்தேயு 16:16) என்று கூறினார். இயேசு பேதுருவிடம் இந்த வெளிப்படுத்தல்



மனித ஞானத்தினாலே உண்டாகாமல் பரலோக பிதாவி னால் உண்டானபடியால் நீ பாக்கியவான் என்று கூறினார். அவருடைய போதனைகளை உண்மையாய் படித்த பின்பு இயேசு தாம் தேவனுடைய நித்தியமான, தனித்துவமிக்க குமாரன் என்ற நிலைக்குக் குறைவாக எப்போதாவது தம்மைக் கருதினார் என்று மெய்யாய் முடிவுசெய்வது கூடாத காரியம். பின்வரும் வார்த்தைகள் அவருடைய போதனைகளை சுருக்கமாகத் தருகின்றன.

தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை அனுப்பினார் என்ற போதனை வேதாகமத்தில் தொடர்ந்து காணப்படுகிறது. (ஆங்கில கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பி லிருந்து எடுக்கப்பட்ட பிகாட்டன் என்ற வார்த்தை குறித்தும், அதைக் குறித்த தீதாத்தின் வாக்குவாதம் குறித்தும் அறிய இச்சிறுநூல் வரிசையில் மூன்றாவதான குர்ஆன் மற்றும் வேதாகமம் மூலப்பிரதிகளின் வரலாறு என்னும் நூலில் காண்க). பூமியிலுள்ள தேவனுடைய பிள்ளைகள், அதாவது அவருடைய குமாரரும் குமாரத்திகளும், தேவன் அவர்களுக்குப் பிதாவாக மாறினபடியாலும், அவர்களைத் தம்முடைய பிள்ளைகளாக அவர் தெரிந்து கொண்ட படியாலும் அப்படியாயிருக்கிறார்கள். இயேசுவோ தேவ னுடைய நித்தியமான குமாரன்; மற்றவர்கள் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவரிடத்திலிருந்து இவ்வுலகிற்கு வந்தவர். தேவனுடைய முழுமையான நித்திய குமாரனு மாகிய இயேசுவுக்கும் தேவனுடைய புத்திரராய் மாறின

கிறிஸ்தவர்களுக்கும் இடையிலுள்ள முழு வித்தியாசமும் கீழ்வரும் வார்த்தைகளில் மிக நன்றாக விளக்கப் பட்டுள்ளது.

நாம் புத்திரசுவிகாரத்தை அடையும்படி நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத் தக்கதாக காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்.

கலாத்தியர் 4:4

அநேகர் புத்திரசுவிகாரம் அடையும்படியாக தேவன் தம்முடைய குமாரனை அனுப்பினார். இயேசு இதை நன்றாக தெளிவாகப் போதித்திருக்கிறார்: நான் தேவனிடத் திலுருந்து புறப்பட்டு வந்தேன். (யோவான் 8:42) மேலும் இன்னொரு வசனம் இதை இன்னும் அதிகத் தெளிவாக்குகிறது.

தேவன் இவ்வுலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படியல்ல அவர் மூலமாய் இவ்வுலகத்தை இரட்சிக் கும்படிக்கே தம்முடைய குமாரனை இவ்வுலகிற்கு அனுப்பினார். யோவான் 3:17

இயேசுவே பிதாவினிடத்திலிருந்து வந்த ஒரே குமாரன் (யோவான் 1:18), தம்முடைய எல்லாப் போதனை களிலும் இயேசு தாமே தம்மை இவ்வாறு எடுத்துக் காட்டி யுள்ளார். தேவனை விசுவாசிக்கிற மெய் விசுவாசிகள் யாவரும் தேவனுடைய பிள்ளைகள் என்கிற அர்த்தத்தில்



அவர் தம்மை தேவனுடைய குமாரனென்று சொல்லிக் கொள்ளவில்லை. தாம் திரும்ப வரப்போதும் நாளைக் குறித்து அவர் கூறுகிறார்: அந்த நாளையும் அந்த நாழி கையையும் பிதா ஒருவர் தவிர, குமாரனும் அறியார், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், எந்த மனுஷனும் அறியான் மத்தேயு 24:36, மாற்கு 13:32. இங்கே தெளிவான ஒரு அதிகார அடுக்கு காணப்படுகிறது. அதாவது மனுஷன் -தூதர்கள்- குமாரன்-பிதா. மிகத் தெளிவாக தூதர்களுக்கு மேலானவரான நித்திய பிதாவின் ஒரேகுமாரன் என்ற ஒரு முடிவான நிலையில்தான் இயேசு தம்மைக் குறித்துப் பேசினார். தெய்வீக ஆளத்துவத்தை தொடர்புபடுத்தியே தம்முடைய பதவியை அவர் குறிப்பிடு கிறார்.

இயேசுவானவர் நானும் என் பிதாவும் ஒன்றாயி ருக்கிறோம் (யோவான் 10:30) என்று சொன்னதைக் குறித்து தீதாத், எல்லாவற்றையும் அறிவதிலும், சுபாவத்தி லும், எல்லாவற்றையும் செய்யும் வல்லமையிலும் இயேசு தம்முடைய பிதாவுடன் ஒன்றாயிராமல் நோக்கத்தில் மட்டுமே அப்படியிருக்கிறார் என்று கூறிக்கொண்டே போகிறார். (இஸ்லாத்தில் கிறிஸ்து, பக்கம் 37). தம் கூற்றுக்கு ஆதரவு சேர்க்க யோவான் 10:27-29 வசனங் களை மேற்கோள் காட்டுகிற அவர் பின்பு எழுதுவதாவது:

கடைசி இரண்டு வசனங்களின் முடிவு பகுதியின் சரியான நிலையை அறிய முடியாமல் இவ்வளவு குருட்டா ட்டமாக யாரொருவர் எப்படி இருக்க முடியும்? ஆவிக்குரிய

குருட்டுத்தனம் சரீரக் குருட்டுத்தனத்தைவிட ஊடுருவிப் பார்க்க கடினமானது. (இஸ்லாத்தில் கிறிஸ்து, பக்கம் 37)

குருட்டுத்தனம் உண்மையில் எங்கிருக்கிறது என்றும், குருட்டுத் தனத்தினால் யாருடைய ஆவிக்குரிய கண்கள் மங்கிப்போயுள்ளன என்றும் வியப்பு ஏற்படுகிறது. ஏனெனில், தீதாத் குறிப்பிடும் ஒரு வசனத்தில் இயேசு தமது மெய்ச் சீடர்கள் யார் என்று கூறும் குறிப்பிடத்தக்க அறிக்கை உள்ளதை தீதாத் சந்தர்ப்பவசமாக மழுப்புகிறார். அந்த வசனம்.

நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக் கிறேன். யோவான் 10:28.

தேவனைத் தவிர வேறு யார் ஜீவனை மட்டுமல்ல நித்திய ஜீவனையும் கொடுக்க முடியும்? இப்படிப்பட்ட அறிக்கைகளை மேலும் கீழும் உள்ள வாக்கியங்களோடு மட்டுமல்ல இயேசு தம்மைக் குறித்துப் போதித்தவை யாவற் றோடும் தொடர்புபடுத்தி படிக்க வேண்டும். அவர் இன்னொரு இடத்தில் இப்படிச் சொன்னார்.

பிதாவானவர் மரித்தோரை எழுப்பி அவர்களுக்கு ஜீவனைக் கொடுக்கிறதுபோல, குமாரனும் தமக்குச் சித்த மானவர்களுக்கு ஜீவனைக் கொடுக்கிறார். யோவான் 5:21. பிதாவுக்கு இருக்கும் அதே சர்வ வல்லமையைக் குமாரனும் பெற்றிருக்கிறார் என்று இந்த அறிக்கை காட்டு கிறது. தமது பூமிக்குரிய வாழ்க்கையின் இறுதியிலே இயேசுவானவர் ''நீர் எனக்கு தந்த எல்லாருக்கும் நித்திய ஜீவனைக் கொடுக்கும்படி மாம்சமான யாவர் மேலும்



அதிகாரம் எனக்கு நீர் கொடுத்தபடியே என்று பிதாவிடம் கூறுகிறார் (யோவான் 17:2), நானும் என் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம். (யோவான் 10:30) என்று இயேசு கூறியது அந்தத் தகுதியைப் பெற்றுக் கொள்ளும்படி அல்ல; எந்தவொரு வியாக்கியானியும் நோக்கத்தில் மட்டும் ஒன்றாயுள்ளனர் என்று அர்த்தம் கூறி மட்டுப்படுத்தக்கூடிய அளவு தரம் தாழ்ந்துவிடவும் இல்லை அந்த அறிக்கை முகமதிப்பிலேயே அந்த அறிக்கை எல்லாவற்றிலும் ஒன்றாக என்று அர்த்தப்படுகிறது. பிதா வுக்கும் குமாரனுக்கும் முழுமையான ஒருமைப்பாடு இருக்கிறது. அதனால் தாம் தெய்வீகத்தன்மை உடையவர் என்ற கருத்தைச் தெரிவிக்க அவர் எண்ணாமலிருந்தால் தகுதி பெறாமலிருந்தால் தகுதி பெறாமலேயே இப்படிப் பட்ட ஒரு ஆச்சரியகரமான அறிக்கையைச் சொல்லியிருக்க மாட்டார். அவருடைய அறிக்கையை யூதர்கள் அப்படியே புரிந்துகொண்டதில் ஆச்சரியமில்லை. (யோவான் 10:33)

மேலும் முன்பு குறிப்பிடப்பட்ட வசனங்களில் சில வார்த்தைகளை பெரிய எழுத்துகளில் தீதாத் எழுதி இருப்பது கவனத்தை ஈர்ப்பதாயிருக்கிறது. அது இயேசு தம்மைப் பின்பற்றுகிறவர்களைத் தம்முடைய கையிலிருந்தும் பிதாவுடைய கையிலிருந்தும் யாரும் பறிக்க முடியாது என்று கூறின அறிக்கையாகும். பிதாவுக்கு உள்ள அதே வல்லமை இயேசுவுக்கு இல்லாவிட்டால் இப்படி எவ்வாறு கூற முடியும்? தாம் பிதாவுடன் நோக்கத்தில் மட்டும் அல்ல

அந்த நோக்கத்தை முழுமையான செயலாக மாற்றவல்ல முழுமையான நித்திய வல்லமையைப் பெற்றிருப்பதிலும் ஒன்றாக இருக்கிறதைக் காட்டவே இந்த அறிக்கையைக் கூறினார் என்பது தங்கள் முன் யூகங்களால் வேதாகமத் திலுள்ள இயேசுவின் போதனைகளைக் காணாதபடி தங்களைக் குருடாக்கிக் கொள்ளாதவர்களின் கண்களுக் குத் தெளிவாகத் தெரியும்.

தீதாத்தின் முழு பிரச்சினை என்னவெனில் அவர் முஸ்லிமாக இருப்பதால், இயேசு நித்திய தேவ குமாரனல்ல ஆகவே அவர் தம்மை அப்படி அழைத்திருக்க மாட்டார் என்ற முன் அபிப்பிராயத்தின்படி வேதாகமத்தை அணுகு வதாகும். ஆகவே திறந்த மனதுடன் அவரால் வேதாகமத்தை வாசிக்க முடியாது அதை முரணற்ற வகையில் வியாக்கியானம் செய்யவும் முடியாது. இயேசு தம்மை தேவனுடைய குமாரனென்று அழைக்கும் வெளிப்படையான அறிக்கைகளை மறுபடியும் மறுபடியும் அவர் பார்க்கும்போது அவரால் அவற்றை ஏற்றுக் கொள்ள முடிகிறதில்லை. அவருடைய முன் அபிப்பிராயத்தால் ஒன்று இந்த அறிக்கைகள் அவரால் கண்டு கொள்ளாமல் விடப்படும் அல்லது அவைகளைப் பார்க்கப் பொறுக்காத தால் தன்னால் முடியும்போதெல்லாம் தவறான வியாக்கி யானம் செய்து புரட்டிவிடுவார்.

தன்னுடைய புத்தகத்தின் கடைசியில் தனது கூற்று களுக்கு ஆதரவாக இருக்க இரண்டு நிகழ்வுகளை இயேசு



வின் வாழ்க்கையிலிருந்து சுட்டிக் காட்டுகிறார். இயேசு ஒரு வாலிபனிடம் அவன் நித்திய ஜீவனில் பிரவேசிக்க வேண்டுமானால் கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார். (மத்தேயு 19:17) . அது இஸ்லாமிய கொள்கைக்கும் இசைந்து போகிறபடியால் அதை அதிகமாக முக்கியப்படுத்துகிறார். இருப்பினும் அந்த அறிக்கையை சூழ்நிலைக்குச் சம்பந்தமில்லாதபடி வளைத்து தான் வேறு இடத்தில் கூறி எச்சரித்துள்ள கண்ணியில் தானே விழுகிறார். தொடர்ந்து வரும் வசனங்கள் அவருடைய விவாதத்துக்குப் பொருத்த மாயில்லை. எனவே அதை விட்டுவிடுகிறார். இயேசு தன்னிடம் வந்த அந்த இளைஞனிடம் தேவனுடைய கற் பனைகளை ஒருவரும் முழுமையாக கைக்கொள்ள முடியாது என்று காண்பிக்கிறார். எனவே நான் சொல்லுகிற வழியில் நித்திய ஜீவனில் பிரவேசிக்கும்படி அறிவுறுத்து கிறார். அந்த இளைஞன் மிகவும் பணக்காரன், இயேசு அவனிடம் கூறுகிறார்.

நீ பூரணனாயிருக்க விரும்பினால் போய் உனக்குள்ளதை விற்று தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷங்கள் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா. மத்தேயு 19:21.

இன்றைக்கு பூரணமானவன் ஒருவனும் இல்லை என்பது உண்மைதான் ஆனால் தேவன் பூரணமான வராக இருப்பார், பூரணத்தின் தமது அளவுகளின் படிதான்

நம்மை நியாயந்தீர்ப்பார். அவரது கற்பனைகளை ஓரளவு கைக்கொள்வது அவருக்கு ஏற்புடையதல்ல யார் அவை களைப் பூரணமாகக் கைக்கொள்கிறார்கள்? இந்த இளை ஞனிடம் அவன் அதைச் செய்வது முடியாது என்று உணர்த்திய பின்பு ஜீவனுக்குப் போவதற்கு இன்னொரு வழியைக் காண்பிக்கிறார். நீ பூரணனாயிருக்கிற விரும்பினால்... என்னைப் பின்பற்றி வா

இரண்டாவது நிகழ்வு லாசருவை மரித்தோரிலி ருந்து எழுப்பினதைப் பற்றியது. இயேசு அதற்காக பிதாவை நோக்கி ஜெபித்தபடியால் அவர் தேவனுடைய நித்தியமான குமாரனாயிருக்க முடியாது என்ற முடிவுக்கு தீதாத் எவருகிறார். இங்கேயும் கூட அந்த ஜெபத்தின் சூழலை அவர் அப்படியே விட்டுவிட்டு அந்த அற்புதமான அதிசய செய்கையின்போது இயேசு சொல்லிய சிறந்த அறிக்கையைக் கண்டு கொள்ளாமல் தீதாத் விட்டுவிட்டார்.

நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து விசுவாசிக்கிறவனோ என்றைக்கும் மரியா மலும் இருப்பான். யோவான் 11:25.

இந்த அறிக்கையைக் கூறும் அசல் கிரேக்க வார்த்தைகள் மிகவும் வலியுறுத்துபவை. நான், நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் அல்லது நான் தானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்று அவை அர்த்தப்படுகின்றன. அதாவது இயேசு தாமே பிரத் யேகமான முழுமையான விதத்தில் உயிர்த்தெழுதலும்



ஜீவனுமாக இருக்கிறார். அவர் ஜீவனைக் கொடுக்கிறவர் என்று அழைக்கப்படுவதில் (அப்போஸ்தலர் 3:15) ஆச்சரி யமே இல்லை. நித்தியமான குணாதிசயம் இல்லாத எவரும் இவ்வித அறிக்கையைக் கூறமுடியாது. தெய்வீகக் குணா திசயம் உள்ள ஒருவர் மட்டுமே இவ்வித வார்த்தைகளைக் கூறமுடியும்.

தீதாத் செய்யும் பெரிய தவறு என்னவெனில், அவர் வேதாகமத்தை வாசிக்கும்போது அது என்ன சொல்கிறது என்பதைக் கண்டுபிடிக்கும் நோக்கத்தோடு அதைப் படிக்காமல் அதற்கு என்ன சொல்லவேண்டும் என்ற முன் அபிப்பிராயத்தோடு படிப்பதுதான். இயேசு தம்மைப் பற்றி என்ன சொல்கிறார் என்பதை அறியும் விருப்பத்தோடு தான் கிறிஸ்தவர்கள் வாஞ்சையோடு வேதாகமத்தைப் படிக்கிறார்கள். அவர்கள் இயேசுவை இவ்வுலகத்தை மீட்கும்படி மனித உருவில் வந்த தேவனுடைய நித்திய குமாரன் தான் என்ற உலகளாவிய முடிவுக்கு வந்தனர் என்று சரித்திரத்தில் நாம் காண முடிகிறது. அது நாங்கள் வாசிக்கிற வேதாகம புத்தகங்களில் அடங்கியுள்ள உண்மைகளை வெளியரங்கமாக அளவிட்டு செய்த ஒரு முடிவாகும். ஆனால் தீதட் போன்றவர்கள் தாங்கள் வேதாகமத்தைக் கையில் எடுப்பதற்கு முன்பாகவே இயேசுவைக் குறித்து என்ன சொல்ல வேண்டும் என்று முன்னதாகவே முடிவு செய்தவர்கள். இயேசு தேவ குமாரனல்ல வெறும் தீர்க்கதரிசிதான் என்று நம்பும் அவர் வேதாகமம் இந்த நம்பிக்கையை ஆதரிக்க வேண்டும்

என்ற முன் அபிப்பிராயத்தோடு அதைப் படிக்கிறபடியால் எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் மாற்றவும் சீர் குலைக்கவும் முயற்சி செய்கிறார்.

இப்படியாக தீதத் வேதாகமத்தை வியாக்கியானம் செய்வதற்கு முற்றிலும் தகுதியற்றவர், பொருத்தமற்றவர் ஆகிறார். வேதாகமம் போதிக்காவிட்டால் இயேசு தேவனுடைய நித்தியமான குமாரன் என்று கிறிஸ்தவர்கள் உலகமுழுவதும் விசுவாசிப்பது ஏன்? வேதாகமம் இப்படிப் பட்ட உபதேசத்தைப் போதிக்கக் கூடாத என்ற முன் அபிப் பிராயத்தினால்தான் தீதத் இந்த உண்மையைத் தவறு என நிரூபிக்க முயல்கிறாரே தவிர வேதாகமத்தை அவர் நேர்மையாக ஆய்வு செய்ததினால் அல்ல. வேதாகமத்தைக் குருட்டாட்டத்தோடு வாசிக்கிறவர்கள் யார் என்பது மிகத் தெளிவு.

வேதாகமம் இயேசுவை தேவனுடைய குமார னென்று போதிக்கக் கூடாது எண்ணுகிற இஸ்லாமிய பரப்பு ரையாளரின் நேர்மையாக ஆக்கபூர்வமாக வேதாகமத்தை வாசிக்கக்கூடிய திறமைதான் அவருடைய கொள்கை முன் அபிப்பிராயத்தினால் குருடாகியுள்ளது முடிவாக நாம் சொல்லக்கூடியதெல்லாம் அவர் நிச்சயமற்ற ஒரு விதத்தில் யோவான் 1:1ஐ தமது புத்தகத்தில் 40, 41 பக்கங்களில் கல்விமானைப் போல வியாக்கியானம் செய்ய முற்படுகிறார் என்பதே. அந்த வசனம் கூறுகிறது:

‘ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை



தேவனோடிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது’ யோவான் 1:1.

‘அந்த வார்த்தை தேவனோடிருந்தது’ என்பதில் தேவன் என்பதற்கு ‘ஹோதியோஸ்’ என்றும் ‘அந்த வார்த்தை தேவனாயிருந்தது’ என்பதில் ‘டான்தியோஸ்’ என்றும் கிரேக்கவார்த்தைகள் வந்துள்ளதாக தீதாத் கூறுகிறார். ரெவரண்ட் மாரிஸ் அவர்களுடன் பேசும் போது, தமது சிறந்த கிரேக்க மொழி அறிவினாலே தான் அவரை முற்றிலும் பேசமுடியாமல் குழப்பிவிட்டதாக தீதாத் கூறுகிறார். ஆம் இந்த ‘முஸ்லிம் வேதாகம அறிஞர்’ என்றழைக்கப்படவேண்டியவரைக் கண்டு வியந்து நிற்கிறோம். ஏனெனில் கிரேக்க வார்த்தை குறித்த தமது அறியாமையை வெளிப்படுத்தியதேயன்றி அவர் வேறொன்றையும் செய்யவில்லை. முதல் வாக்கியத்தில் ‘டான்தியோஸ்’ என்றும் இரண்டாவது வாக்கியத்தில் ‘தியோஸ்’ அதாவது தேவன் என்றும் தான் அங்கு கிரேக்க வார்த்தை இருக்கிறது. இந்த எளிதில் காணக்கூடிய தவறின் மீது அவ்வளவு தெளிவான விவாதத்தை தமது புத்தகத்தில் தீதாத் கட்டியெழுப்பியிருக்கிறார்.

‘டான்தியோஸ்’ என்றால் ஒரு கடவுள் என்று அர்த்தம் ஆகையால் ‘அந்த வார்த்தை ஒரு கடவுளாயிரு ந்தது’ என்று தான் யோவான் 1:1 கூறுகிறது என்று அவர் கூறுகிறார். இது இயேசுவின் தெய்வீகத்தை இல்லையென் றாக்கிவிடும். இருப்பினும் அசல் கிரேக்க வேதாகமத்தில் ‘ஹோலோகோஸ்’ அதாவது வார்த்தை ‘தியோஸ்’

அதாவது தேவனாயிருந்தது என்றுதான் இருக்கிறது. ஆகவே 'அந்த வார்த்தை தேவனாயிருந்தது' என்று சரியாக வருகிறது. இயேசுவின் தெய்வீகத்தை இது உறுதிப் படுத்துகிறது. வேதாகமம் குறித்த தனது அறியாமையி னால் தீதாத் செய்த ஒரு அதிர்ச்சியான தவறின் மூலம் அவருடைய விவாதம் தரையிலே விழுகிறது. கிறிஸ்தவ விசுவாசத்துக்கு எதிரான அவருடைய புத்தகங்கள் தொடர்ந்து இரண்டு எதிரெதிர் காரியங்களை வெளிப் படுத்துகின்றன. ஒரு பக்கம் தான் எழுப்பும் விஷயங்களில் தைரியமான நம்பிக்கை, மறுபக்கம் அவைகளில் உண்மை இல்லாத நிலை.

'வேதாகமத்தின் முஸ்லிம் அறிஞர்' என்ற பதவிக்கு போதிய தகுதிகள் தீதாத்க்கு இல்லை என்று காண்பிக்க இன்னும் சான்றுகள் தேவையில்லை. அவருடைய விவாதங்களும் நம்பிக்கையும் வேதத்தை அறியாத கவனமற்ற முஸ்லிம்கள் இவர் வேதத்தைக் குற்றம்காணும் பெரிய அறிஞர் என்று எண்ண வைத்திடும், ஆனால் இயேசு சொல்வது போல வெளித்தோற்றத்தின்படி மாத்திரம் தீர்ப்பு செய்வது தவறானதும் புத்தியீனமானது மாகும் (யோவான் 7:24).

'இஸ்லாத்தில் கிறிஸ்து' என்னும் புத்தகத்துக்கு பதிலான இந்நூல் காண்பிப்பதுபோல, வேதாகமத்தில் நல்ல அறிவுள்ள எந்த கிறிஸ்தவனும் தீதாத்தின் விவாதங் களை அதிகச் சிரமமில்லாமல் இல்லையென்றாக்க முடியும், சில சமயங்களில் மிக எளிதாகவும் அப்படிச்



செய்ய முடியும் தீதத் செய்யும் இந்த வெளிப்படையான தவறுகள் அவர் கடைபிடிக்கும் வேதாகம போதனை களைப் புரட்டும் செயல் முடிவாகக் காணப்பிப்பது என்ன வெனில், கிறிஸ்தவத்துக்கு எதிராக அவர் மேற்கொண் டுள்ள இந்தப் போராட்டம் முற்றிலும் தேவையற்றது. மேலும் வேதாகமத்தை வெட்ட வெளிச்சமாக்கும் முயற்சி யில் அவர் உண்மையில் தம்மைத்தான் வெட்ட வெளிச்சமாக்குகிறார்.

**ஒருபோதும் இல்லாத கடவுள்**

இஸ்லாமிய பரப்புரை மையம் 1983-ல் 'ஒருபோதும் இல்லாத கடவுள்' என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை வெளியிட்டது. முதலில் 1980ல் அல் பலாக் என்னும் முஸ்லிம் செய்தித்தாளில் அது கட்டுரையாக, அஹமத் தீதத் ஒலிப்பதிவு நாடாக்களில் கிறிஸ்தவ விசுவாசத்துக்கு எதிரான சொற்பொழிவுகளை வெளியிட்ட போது அவைகளுக்குப் பதிலாக நான் எழுதியவைகளுக் குப் பதிலாக எழுதப்பட்டது. அந்தப் புத்தகத்தில் வேதாகம மேற்கோள்கள் நிறைய இருந்தன. முக்கியமாக நான்கு சுவிசேஷங்களிலிருந்து எடுக்கப்பட்ட, எல்லாமே இயேசு மனித உருவில் பூமியில் வாழ்ந்த 33 ½ ஆண்டுகால வாழ்க்கை சம்பந்தப்பட்டவை அதிகம் இருந்தன. ஒவ்வொரு மேற்கோளும் ஒரு தலைப்பின் கீழ் இயேசு என்னும் பெயருக்குப் பதிலாக தேவன் என்று போடப்பட்டு, வியாக்கியானங்கள் இயேசுவின் மனிதத்தன்மை குறித்து எழுதப்பட்டு அவருடைய தெய்வீகத்தை விசுவாசிக்கும்

கிறிஸ்தவர்களைப் பரிகசிக்கும் வண்ணம் தரப்பட்டிருந்தன. புத்தக ஆசிரியர் தனது நோக்கத்தை பின்வரும் வார்த்தைகளில் கூறுகிறார்.

எமது தலைப்புகளிலும் உபதலைப்புகளிலும் இயேசு என்பதை 'தேவன்' என்று குறிப்பிட்டு இயேசு தேவன் என்று குறிப்பிடும் இம்மனிதனின் நகைப்புக்குரிய கூற்றைச் சுட்டிக்காட்டியுள்ளோம். (ஒருபோதும் இல்லாத கடவுள், பக்கம் 2,3)

சுவிசேஷத்திலிருந்து தேர்வு செய்யப்பட்ட சிறு வசனபகுதிகளும் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளும் இந்த நூலின் ஆசிரியர் கிறிஸ்துவின் தெய்வீகத்தைப் பரிகசிக்க எவ்விதத்தில் முயற்சி மேற்கொண்டுள்ளார் என்பதை விளக்குகிறது.

மத்தேயு 1:1க்கு அவர் கொடுத்துள்ள தலைப்புகள் கடவுளின் முன்னோர்கள் இயேசு கிறிஸ்துவின் தலைமுறை 'தாவீதின் குமாரன்' 'ஆபிரகாமின் குமாரன்' என்பவைகளே. (பக்கம் 3)

பக்கம் 6ல் லூக்கா 2:41, 42ஐ அவர் இவ்வாறு எழுதியுள்ளார். கடவுளை அவருடைய பெற்றோர் எருசலேமுக்குக் கொண்டு போனபோது அவருக்கு வயது பன்னிரண்டு வேதவசனம் பின்வருமாறு: அவருடைய தாய் தகப்பன்மார் வருஷந்தோறும் பஸ்கா பண்டிகையில் எருச லேமுக்குப் போவார்கள். அவருக்குப் பன்னிரண்டு வயதானபோது அவர்கள் அந்தப் பண்டிகை முறைமையின்படி எருசலேமுக்குப் போய் கடவுள் ஒரு பழங்குடி



யூதன் யூதாகோத்திரத்து சிங்கம் (வெளிப்படுத்தல் 5.5) (பக்கம் 9) இந்த வேதபகுதிகள் பிரதானமாக இயேசுவின் மனிதத் தன்மையையும் அவருடைய குறுகிய கால பூமிக்குரிய வாழ்க்கையையும் குறிக்கிறது என்று புத்தகத்தை வாசிக்கிற எவரும் புரிந்துகொள்ளலாம். இயேசு ஒரு மனிதனாக, மனுக்குலத்தின் எல்லா அளவுகளுக்கும் உட்பட்டவராக இருந்தபடியால் அவர் தேவனாக இருக்க முடியாது என்பதை வலியுறுத்துவதே கட்டுரையின் நோக்க மாக இருக்கிறது. (முன்னோர்கள், இனம், மனித உணர்ச்சி, சரீர பலவீனங்கள் ஆகியவையே அந்த அளவுகள்)

பெயர் குறிப்பிடப்படாத அக்கட்டுரையின் ஆசிரியர், ஆனால் முஹம்மது சீபி என்று அழைக்கப் பட்டவர் எனத் தெரிகிறது, அல் பலாக் பத்திரிக்கைக் கட்டுரையில் கிறிஸ்தவ உபதேசமான திரித்துவத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இயேசு தேவன் என்ற கிறிஸ்தவ விசுவாச பூஜையே சுட்டிக்காட்டி (பிதாவையும் பரிசுத்த ஆவியானவரையும் விட்டுவிட்டு இயேசு தேவகுமாரனாக இருக்கிறதைக் கவனிக்காமல்) எழுதியுள்ளார் கிறிஸ்தவர்கள் இயேசு தேவனென்று சொல்கிறார்கள் எனில் அவர் பிதாவின் குணாதிசயத்தை மும்மடங்கு திரித்துவத்தில் (தீதத்தின் ஒலி நாடாக்களுக்கு நான் அளித்த பதிலில் இவ்விஷயத்தை கவனமாகக் குறிப்பிட்டுள்ளேன்) பரிசுத்த ஆவியானவரோடு பகிர்ந்து கொள்கிறார் என்று அர்த்தமாகிறது என அவர் அறிந்தே இருந்தார். ஆனால் தந்திர

மாக கிறிஸ்தவ உபதேசத்தை தவறாக முன்வைத்து மாற்றி விட்டார். இயேசு தான் தேவன் என்னும் விசுவாசத்தை உருவாக்கி அதன் மீது தனது முழு விவாதத்தையும் உருவாக்கியுள்ளார்.

இஸ்லாம் மேற்குலகில் தவறாகப் புரிந்து கொள்ளப் படுகிறது, தவறாக முன் வைக்கப்படுகிறது என்று முஸ்லிம் கள் சரியாகவே கூறுகிறார்கள். அதேபோல இயேசு கிறிஸ்து குறித்த கிறிஸ்தவ உபதேசங்களையும் முஸ்லிம் கள் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள் தவறாக முன் வைக் கிறார்கள். ஒன்று இயேசு கிறிஸ்துவின் தெய்வீகம் குறித்த உபதேசத்தைப் புரிந்து கொள்ளமாட்டார்கள் அல்லது தங்களது நோக்கங்களுக்கு ஏற்ப தெரிந்தே தவறாக முன்வைப்பார்கள். இயேசு கிறிஸ்து மனுஷகுமாரனும் அதேபோல தேவகுமாரனுமாக இருக்கிறார் என்பது அடிப்படையான கிறிஸ்தவ உபதேசம். அவரது குறுகிய கால பூமிக்குரிய வாழ்வில் அவர் வேண்டுமென்றே ஏற்றுக் கொண்ட மனித வரையறைகள் நிமித்தம் அவருடைய தெய்வீகத்துக்கு எதிராக எழுப்பப்படும் எந்த விவாதமும் செல்லத்தக்கதல்ல. வேதாகமத்தில் சொல்லப்பட்டிருப்பது போல இயேசு கிறிஸ்து தேவகுமாரன் என்ற கிறிஸ்தவ உபதேசத்தின் மேல் முஸ்லிம் எழுத்தாளர்கள் எழுதுவார் களானால் அது வரவேற்கக்கூடிய மாற்றமே. சீப்பியின் கட்டுரையில் காணப்படும தவறான முன்வைப்பு விரும்பத் தக்கதல்ல அந்தக் கட்டுரையின் சாராம்சத்திற்கும் ஆழமாகப் பதிலளிக்கக்கூடிய ஒரு வசனபகுதி வேதாகமத்தில் உண்டு.



கிறிஸ்து இயேசுவிலிருந்த இந்தச் சிந்தையே உங்களிலும் இருக்கக் கூடாது. அவர் தேவனுக்குச் சம மாயிருந்தும் அதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் அடிமையின் ரூபமெடுத்துத் தம்மைத் தாமே வெறுமையாக்கினார், மனுஷ ரூபமானார். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு தம்மைத்தாமே தாழ்த்தினார்; அவர் மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரண பரியந்தம் கீழ்ப்படிந்தவரானார். பிலிப்பியர் 2:5-8.

இந்த வசன பகுதியில் 'ரூபம்' என்பதற்கான கிரேக்க வார்த்தை 'சாரம்' அல்லது 'குணாதிசயம்' என்ற அர்த்தத்தை உடையது. இந்த அர்த்தத்துக்குப் பொருத்த மான விளக்கம் நம்முடைய இந்தச் சொற்றொடர் உட்புறம் வரைக்கும் ஓர் ஆப்பிள் அதாவது, உள்ளும் ஊடாகவும அது ஒரு ஆப்பிள் என்பதாகும். இங்கே ரூபம் என்ற பதத் திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைக்கும் இதே அர்த்தம்தான். இப்படி இந்த வசனபகுதி இயேசுவின் அசல் குணாதிசயம் மற்றும் சாராம்சம் ஒரு தெய்வீக நபருக்குரி யதே, அதாவது இயேசு உள்ளும் ஊடாகவும் தேவன் என்று நமக்குப் போதிக்கிறது. இருப்பினும் நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசித்து தேவனைப் போல மாற விரும்பிய முதல் மனிதனாகிய ஆதாமைப போலல் லாமல், இயேசு தெய்வீகமானவராயினும் நித்திய பிதாவைப் போல சாராம்சம் உடையவராயிருப்பினும், அதைத் தமது மகிமைக்கு அவசியமானது என எண்ணாமல், பரலோகத்தில் அந்தப் பதவியைப் பற்றிப் பிடித்திருக்க எண்ணாமல், பூரண தாழ்மையுடன் மனித உருவாக அவதாரம் எடுத்து மனுஷ ரூபமாக காணப்பட்டார்.

(அதாவது உள்ளும் ஊடாகவும் மனுஷனாக மாறினார்)

இயற்கையாகவே மனிதர் தேவனுடைய அடிமைகளாய் இருப்பதால், அவர் இயற்கையாக தேவனுடைய அடிமையாக இல்லாவிட்டாலும் அடிமையின் ரூபத்தை எடுத்துக் கொண்டார். விஷயம் என்னவெனில் அவர் தெய்வீக மகிமையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மனப்பூர்வமாக விலக்கிவைத்து, ஆண்களையும் பெண்களையும் மீட்கும்படியாக, பாவம் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் உருவாக்கிய இடைவெளியை அடைக்கும்படியாக மனித அவதாரமெடுத்தார். இவ்வுலகிற்கு மனித உருவில் வருவதற்கான அடிப்படை நோக்கமே இதுதான்.

தேவனுடைய இயற்கையான அடிமையான ஆதாம் போகவேண்டியிருந்ததைவிட அவரை அதிக தூரமாக அவருடைய பூரண தாழ்மையும் சிறுமையும் நடத்தின. அவர் மரணபரியந்தம் சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவரானார். பரலோக சிங்காசனத்திலிருந்து பூமியின் மிகத் தாழ்வான இடங்களுக்கு அவர் இறங்கினார். ஆனால் பாவமனிதன் இவருடைய மீட்பின் வேலை மூலமாக தேவனுடைய பிள்ளைகள் என்ற உயர் நிலைக்கு வரும்படியாகவே இதைச் செய்தார். மனிதனின் பரிதாப நிர்பந்த நிலை எனும் ஆழத்திற்கு அவர் இறங்கியதன் விளைவாக தேவன் அவரை பரலோக உயரங்களுக்கு மேலாக உயர்த்தினார்.

ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால்கள் யாவும் முடங்கும்படிக்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும அறிக்கை



பண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். பிலிப்பியர்2:9-11

வருங்காலங்களில் அவர் மீண்டும் பெற்றுக் கொண்ட நித்திய மகிமையில், எல்லா மனிதரும் எல்லா தூதர்களும் அவருக்கு முன்பாகப் பணிந்து துதியின் மூலமாகவோ அல்லது அவரது மெய்யான நிலை குறித்த காலங்கடந்த வேற்றுமையிலோ அவரை ஏற்றுக் கொள் வார்கள்.

அவர் மனித இயல்பை ஏற்றுக் கொண்டார் மற்றும் அந்த இயல்பின் வரையறைகளுக்கும், பெலவீனங்களுக்கும் தம்மை மனப்பூர்வமாகத் தெரிந்து கொண்டார் என்ற உண்மையின் வெளிச்சத்தில், அவருடைய மனிதத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு (அவர் தெரிந்து கொண்ட முற்பிதாக்கள், அவர் தெரிந்து கொண்ட இனம், அவர் ஏற்றுக்கொண்ட மனித வழி உட்பட) எந்தக் குற்றச்சாட்டிலும் உண்மை இல்லை என்பதை எவரும் காண முடியும். சீப்பி தன் கட்டுரையில் ஒவ்வொரு வசன பகுதிக்கும் கொடுத்துள்ள தலைப்புகளில் தேவன் என்று எழுதியுள்ள இடங்களில் மனுஷகுமாரன் என்ற வார்த்தையை நிறுத்துக் காற்புள்ளி இல்லாமல் பயன்படுத்தினால் அந்தத் தலைப்புகள் நல்ல அர்த்தமுள்ளவைகளாக இருக்கும். (உண்மையில் ஒவ்வொரு வசன பகுதியிலும் வேண்டுமென்றே கொடுக்கப்பட்ட தலைப்புகள் அவற்றின் கீழுள்ள வசனங்களைத் தவறாக முன்வைக்கும்படித் தரப்பட்டுள்ளன என்று நான் கூறுகிறேன்)

குர்ஆன் குற்றஞ்சாட்டுவது போல அல்லாஹ் மரியாளின் மகன் கிறிஸ்து என்று கிறிஸ்தவர்கள் ஒருபோதும் கூறுவதில்லை. (இன்னல்லாஹ ஹுவால்

மஸீ ஹுபுனு மர்யம்-ஸூரா 5:72) அதாவது அந்தக் கடவுள் இயேசுவே, தேவன், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியான வர் என்னும் மூன்றில் ஒன்றான ஆள்தத்துவமானவர், அவர்களில் குமாரன் மாத்திரமே மனித உருவில் கிறிஸ்து இயேசு என்னும் பெயரில் வந்தார்.

குமாரன் பிதாவின் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவர் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். (இந்தப் பெயர்கள் தாமே அவர்களிடையில் சாராம்சம் மற்றும் குணாதிசயம் ஆகியவற்றில் சமமானவர்கள் என்றும் மறுபுறம் ஒருவர் மற்றவருக்குக் கீழ்ப்பட்டவர் என்றும் காண்பிக்கிறது? இயேசு தாமே: நான் சுயமாய் வரவில்லை; அவரே என்னை அனுப்பினார் (யோவான் 8:42) என்று சொன்ன படி பிதாவுடைய நோக்கத்தின் பிரகாரமாகவே குமாரன் இவ்வுலகத்திற்கு அனுப்பப்பட்டார் என்றும் விசுவாசிக் கிறோம். மேலும் அவர் எதையும் தம் சுயமாய்ச் செய்கிற தில்லை; பிதாவானவர் என்ன சித்தம் கொள்கிறாரோ, செய்கிறாரோ அவைகளையே செய்கிறார் என்றும், அவர் நித்தியமான தேவகுமாரனாக இருக்கிறபடியால் இந்த தெய்வீகச் சித்தத்தையும் செயல்பாட்டையும் நடப்பிக்கும் படியான சர்வவல்லமை அவருக்குண்டு என்றும் ஏற்றுக் கொள்கிறோம். (யோவான் 5:19). அடிப்படையான கிறிஸ்தவ உபதேசங்களாக இவைகள் இருக்கின்றன.

கிறிஸ்துவைக் குறித்த அடிப்படைக் கருத்து குறித்து கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கிடையில் நிலவும் அடிப்படை வேற்றுமைகள் அவர் தமக்கு மேலானவரின் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டிருப்பதைப் புரிந்துகொள் வதிலோ, அவர் பூமியில் இருந்தபோது



எல்லா அம்சங் களிலும் மனிதனாகவே இருந்தார் என்பதன் பொதுவான நம்பிக்கையிலோ இருக்கவில்லை. அவர் தமக்குக் கட்டளையிடப்பட்டபடி மட்டும் பேசினார். (யோவான் 12:49), அவரிலும் பெரியவர் ஒருவர் இருக்கிறார் (யோவான் 14:28) என்பவைகளை முஸ்லிம்களுடன் நாமும் ஏற்றுக் கொள்கிறோம். அவருடைய இயல்பு குறித்த நம்பிக்கையில் நாங்கள் முக்கியமாக முஸ்லிம்களுடன் மாறுபடுகிறோம், ஏனெனில் அவர் மனிதர், மற்றும் ஒரு தீர்க்கதரிசி என்பதைவிடஅதிகமாக முஸ்லிம்கள் நம்பு கிறதில்லை, ஆனால் கிறிஸ்தவமோ தேவன் அவர் மூலமாக ஒரு தீர்க்கதரிசி என்ற முறையில் அல்ல, தாம் அவர் மூலமாக எல்லாவற்றையும் படைத்த, தம்முடைய மகிமையைப் பிரதிபலிக்கிற, தம்முடைய குணாதிசயத்தின் அதே முத்திரையைப் பெற்றுள்ள குமாரன் என்ற முறையில் பேசினார் என்று போதிக்கிறது (எபிரேயர் 1:3)

ஒருபோதும் இல்லாத கடவுள் போன்ற புத்தகங்கள் இயேசுவை முழுமையா கடவுளாக, பிதா மற்றும் பரிசுத்த ஆவியானவர் குறித்த ஒரு குறிப்புமில்லாமல் அல்லது குமாரன் பிதாவுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறார் என்பதையும் குறிப்பிடாமல் இருப்பதால் கிறிஸ்தவத்தையே தவறாக முன் வைக்கின்றன. அப்படிப்பட்ட வெளியீடுகள் எவ்வித பயனுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதில்லை. இந்த உபதேசம் உண்மையிலேயே என்னவாயிருக்கிறது என்று முஸ்லிம்கள் மதிப்பீடு செய்வார்களென்றால், அவர்கள் பொதுவாக நினைப்பதுபோல அவர்களுடைய சொந்த மார்க்கத்துக்கு தூரமானதல்ல என்று கண்டு, ஒருவேளை இயேசு உண்மையில் யார் என்ற மெய்யான, நெருங்கிய அறிவை அடைவார்கள். அவர் ஒருபோதும் இல்லாத

கடவுள் அல்ல ஆனால் மெய்யாகவே நேற்றும் இன்றும் என்றும் மாறாதவரான (எபிரெயர் 13 :8), பரலோகத்தி லிருநது வந்த நித்திய குமாரன் என்று அறிந்து கொள்வார்கள்.

## கிறிஸ்து இஸ்லாத்திலும் கிறிஸ்தவத்திலும்
## அறிவுத்திறன் கேள்விகள்

**ஜான் கில்கிரைஸ்ட்**

நீங்கள் இந்த புத்தகத்தைக் கவனமாக வாசித் திருப்பீர்களென்றால் பின்வரும் கேள்விகளுக்கு உங்களால் பதில் அளிக்க இயலும். இவை எமது வேதாகம அஞ்சல் வழி கல்வியின் ஒரு பகுதியாகும்.

1. வேதாகமத்தில் ஏசா யார்? தங்கள் பிள்ளை களுக்கு அவருடைய பெயரை யூதர்கள் ஏன் சூட்டுவதில்லை?
2. மலடியாயிருந்து ஒரு குழந்தைக்காக ஜெபித்து அதைப் பெற்றுக்கொண்ட அன்னாள் யார்? அவள் குமாரனின் பெயர் என்ன?
3. இயேசுவின் தாயாகிய மரியாளை ஆரோனின் சகோதரி என்று குர்ஆன் கூறுவதை எப்படி விளக்கு வீர்கள்?
4. குர்ஆன் கன்னிமரியாளை எப்படிக் கனப்படுத்து கிறது? புதிய ஏற்பாடு அவரைக் குறித்து என்ன சொல்கிறது?
5. இயேசு தேவனுடைய அப்போஸ்தலன் என்பதை எப்படி விளக்குவீர்கள்?
6. இயேசு மட்டும் ஏன் ஒரு மனித தகப்பன் இல்லாமல் கன்னிமரியாளிடம் பிறந்தார்?



7. ஆதாமுக்கும் இயேசுவுக்குமுள்ள வித்தியாசம் என்ன?
8. மெல்கிசேதேக்கு எப்படி வரப்போகிற கிறிஸ்துவுக்கு மாதிரியாயிருக்கிறார்?
9. இயேசு நித்தியமான ஜீவ தேவனின் குமாரன் என்பதை நீங்கள் எவ்வாறு விளக்குவீர்கள்?
10. இயேசு தம்மை நாம் பின்பற்ற வேண்டும் என்று ஏன் கூறுகிறார்?
11. ஆதியிலே வார்த்தை இருந்தது; அந்த வார்த்தை தேவனோடிருந்தது; அந்த வார்த்தை தேவனாயி ருந்தது; இதை விளக்குக.
12. இயேசு எப்படி ஒரே நேரத்தில் மெய் மனிதனாகவும் மெய் தேவனாகவும் இருந்தார்?

இக்கேள்விகளுக்கான பதில்களை தனித் தாளில் எழுதி வேறு குறிப்புகள் எதையும் சேர்த்தெழுதாமல் எமக்கு அனுப்பவும். இவைகளில் மூன்றில் இரண்டு பங்கு கேள் விகளுக்குச் சரியான பதில் எழுதினால் உங்களுக்கு வேறொரு புத்தகத்தை இலவசமாக அனுப்புவோம். அதன் மூலம் உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் அன்பும் பெருகும்.